
கொக்குவில் மேற்கு

அருள் மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள்

# அருட்பாமாலை



வெளியீடு;- சு.நல்லையா
"வெண்மதி"
ஆனைக்கோட்டை

வாராஹிபுரம்
கொக்குவில் மேற்கு
11-04-2008

VARATHARAJAN ARUMUGAM
"RAJA SAKTHY"
VAN. NORTH WEST,
ANAICOTTAI.


Received from Shanthi Press.

உ

கொக்குவில் மேற்கு

அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள்

# அருட்பாமாலை



வெளியீடுவோர்
: சு.நல்லையா
"வெண்மதி"
ஆனைக்கோட்டை

வாராஹிபுரம்
கொக்குவில் மேற்கு
11-04-2008

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அருள்மிகு வாராஹி உபாசனையும் அதன் பெருமைகளும் | 1 - 2 |
| காப்பு | 3 – 4 |
| வாராகி அந்தாதி | 4 – 9 |
| வாராகி மாலை | 10 – 19 |
| ஸ்ரீ வாராகி 108 போற்றி கூட்டு வழிபாட்டு முறை | 20 – 21 |
| ஸ்ரீ வாராகி அர்ச்சனை மாலை | 21 – 24 |
| பஞ்சபுராணம் | 1 – 2 |
| கொடித்தம்பத்தருகில் | 3 |
| சிவபுராணம் | 4 – 7 |
| போற்றித் திருக்குறுந்தொகை | 7 |
| போற்றி திருவகவல் | 9 – 15 |
| போற்றி திருத்தாண்டவம் | 15 – 23 |
| திருப்பொற்சுண்ணம் | 23- 28 |
| திருவூஞ்சல் திருப்பதிகம் | 29 – 33 |
| கோளாறு திருப்பதிகம் | 34 – 37 |
| சகலகலா வல்லி மாலை (சரஸ்வதி அந்தாதி) | 38 – 40 |
| கௌரி காப்பு | 41 - 43 |
| வாரகி புகழ் மாலை | 44 – 45 |
| அம்மன் பாடல்கள் | 46 – 50 |
| சிவன் வழிபாடு | 50 – 55 |
| இராகு கால துர்க்கா | 56 - 58 |
| அபிராம் அந்தாதி | 59 - 71 |
| கந்தர் சஷ்டி கவசம் | 72 – 79 |
| திருவெம்பாவை | 80 – 85 |
| எட்டுத் திக்கு தேவாரம் | 86 - 90 |

சீரார் செறிந்து வாழ் சிறந்த நற்பதியாம்
வாராஹிபுரம் தனில் கோவில் கொண்டு
பாரார் பரிந்து போற்றிப் புகழ் பாட வேளமுகத்தோன்
வேலனுக்கு மூத்தோன் நல்லாட்சி செய்வதனால்
ஊரார் துன்பம் துயர் நீத்த
தூய வாழ்வு எய்தி
பேராளராய் பலவளமும் கிட்ட பல்லாண்டு
பணிந்து வாழ்வர் இனிது

# தேரில் வருகிறாள்

வராகி வருகின்றாள் மகா வராஹி வருகின்றாள்
தங்க ரதம் ஏறி தரணி உலா வருகின்றாள்
அந்தணர்கள் அணிவகுத்து தீபம் ஏந்தி நிற்க
மந்திரமணியோசை மண்டலமெலாம் ஒலிபெருப்ப
சங்கு மத்தள ஒலியோசை ஓங்கி நிற்க
சிம்ம வாகனக்காரி சிரித்த முகத்தோடு சிங்காரமாய் வருகின்றாள்
அட்ட திக்குப் பாலகரும் ஆலவட்டம் ஏந்திவர
காருண்ய நாயகி கருணை காட்டி வருகின்றாள்
வேப்பிலைக்காரி வேகம் கொண்டு வருகிறாள்
மங்கள வாத்தியங்கள் எண்திசையும் முழங்கிவர
அரோகரா கோஷம் அகில மெலாம் அதிரவைக்க
பத்தர்கள் கூட்டம் பஜனைபாடி பின் தொடர
பக்க வாத்தியங்கள் சகிதம் பக்தர்கள் துள்ளியாட
கன்னியர் கூட்டம் கற்பூரம் காட்டிவர
மங்கையர் கூட்டம் மலர்மாலை சூடவர
சங்கப்பிரதிஸ்டைக்காரர் அணிஅணியாய் பின்தொடர
காவடியாட்டக்காரர் நாற்புறமும் ஆடிவர
கரகாட்டக்காரர் களித்து நடமாடிவர
வாரா ஹிமுகத்தவள் வரம் வழங்க வருகின்றாள்
வாராஹி புரமக்கள் வளமுடன் வாழ வைக்க



# அருள்மிகு வாராகஹி உபாசனையும் அதன் பெருமைகளும்

நமது தெய்வ வழிபாடுகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது சக்தி வழிபாடு. சக்தி பல உருவங்களும் பல பெயர்களையும் தாங்கி இப் புவியில் வழிபடப்படுகிறாள். இதில் எப்பொழுதும் தனது உடல் பொருள் ஆவி இவற்றை உள்ளடக்கி ஒரு சக்தியின் மீது வைத்து ஜெபம்,ஹோமம், தவம் செய்யும் முறையே உபாசனை எனப்படும். இந்த உபாசனாதிபதிகள் தாங்கள் உபாசிக்கும் தேவதைகளை தாயாக நினைத்து அவள் சொல்லுகின்ற வார்த்தைக்கு அடிபணிந்து நடந்தால் உலகம் போற்றும் சிறந்த ஆன்மீகவாதியாகவும், பலரின் குறைகளை நிவர்த்தி செய்யும் அருளாளராகவும் விளங்கும் நிலையினையும் பெறுவர். இப்படி சிறந்த நிலையினை அடைவது தெய்வ அருள் எனலாம். இவர்களே மகான்கள் எனப் போற்றப்படுகிறார்கள்.

நாம் இன்று எளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய தெய்வமும் அனைவரும் அச்சமுடன் நெருங்கும் தெய்வமும் வாராஹி ஆவாள். வாராஹி என்ற திருநாமத்திற்கு உலகை வசியப்படுத்துபவள் எனவும் பொருள் கொள்ளலாம். பூமி நாயகியாக இருப்பதால் இவளை பூமாதேவி எனலாம். வாராஹி வாரணாசியில் பூமி மட்டத்திற்கு கீழ் சுமார் 30 அடி ஆழத்தில் ஆதி வராகியாக அமர்ந்து கோலோச்சி வருகிறாள். இவள் இங்கு தனித்தன்மையுடன் போற்றப்படுகிறாள். தமிழகத்தின் கலைநயம் மிக்கது, பெரிய கோயில் என அனைவராலும் போற்றப்படும் தஞ்சைப் பிரகதீசுவரர் ஆலயத்தில் இவளுக்கென தனி சந்நிதி உண்டு. அரக்கோணம் - காஞ்சிபுரம் சாலையில் பள்ளூர் என்னும் சிற்றூரில் அன்னைக்கென தனி ஆலயம் அமைந்துள்ளது . இங்கு அஷ்டமி மற்றும் அமவாசை நாட்களில் சிறப்பூசை நடைபெறுகிறது. சப்த மாதர்களில் ஒருவராகத் திகழும் வராகித் தாய் சிவாலயங்களில் பரிவாரதேவதைகளாக போற்றபடுகிறாள். இந்த சப்த மாத வழிபாடு

சாளுக்கியர் காலத்திலிருந்தே வழக்கத்தில் உள்ளது. திருத்தணியில் அமைந்துள்ள சிவாலயத்தில் உள்ள சப்தமாதர்கள் வாகனத்துடன் அமைந்துள்ளது கண்கொள்ளாக்காட்சி.

இவ்வராகித தாய் முப்பெரும் படைகளுக்கு தலைவியாக இருப்பதால் அவளுடைய உபாசனை நமக்கு பல நன்மை தரும். உபாசனையில் சித்தி அடைந்தவர்க்கு அன்னை முன் நடந்து நல்வழி காட்டுவாள். சிவ பூஜை செய்பவர்களுக்கு எப்படி பிறப்பில்லை என சொல்கிறார்களோ அது போல வராகி உபாசர்களுக்கும் பிறப்பில்லை என்பது ஆன்றோர்கள் உணர்ந்த நிலை.

மேலும் வஞ்சமில்லா வாழ்வு வாழ வழிகாட்டுவாள். பஞ்சமி என்ற வராகித்தாய் பஞ்சமித் திதிக்கு சொந்தக்காரியான இவள் வளர் பிறை பஞ்சமியிலும் அக்ஷ்டமி, நவமி மற்றும் அமாவாசை திதிகளிலும் உபாசனை செய்வது ஏற்றம் தரும். வார நாள் 7ம் இவளுக்கு ஏற்றவையே. பூஜை செய்யும் காலம் மாலை 6 மணிக்குப் பின்பும் காலை 6மணிக்கு முன்பும் பூஜை செய்யலாம். எனினும் நம் காரியங்களுக்கு தக்கவாறு நேரத்தை குருமுகமாக அறிந்து பூஜை செய்தல் அவசியம். உதாரணமாக அரசியலில் புகழ் பெற அதிகாலை 3முதல் 4மணிக்குள் அஸ்வாருடைய பூஜை செய்தல் வேண்டும். வராகி என்பவள் எல்லாவற்றையும் இயக்கும் சக்தி. சத்துருக்களை நொறுக்கி அச்சத்துருக்களை மயக்குபவள். இவள் ராஜ ராஜேஸ்வரியின் குதிரைப்படை தலைவி வராகித்தாய் பல்வேறு வாகனங்களில் அமர்ந்தவளாக தியானிக்கப்படுகிறாள். சிங்கம், மகிஷம், வெண்குதிரை மற்றும் புலிமீது அமர்ந்தவளாக தியானிக்கப்படுகிறாள். இதை உபாசகர்கள் தங்கள் உபாசனையின் போது நன்குணரலாம். ஆண்டில் வரும் 25 பஞ்சமிகளையும், உபாசனாதிபதிகள் சிறப்பாக பூஜை செய்து வந்தால் வராகி தேவியின் அருள் பெறலாம் என்பது உறுதி.



## ஆனைமுகத்தான் காப்பு

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
புந்தயில் வைத்திடுவோம் -அவன்பதம்
நாளும் தொழுதிடுவோம்.

## ஆறுமுகத்தான் காப்பு

உருவாய் அருவாய் உளதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## வராகி அன்னை காப்பு

நாயகி நான்முகி நாராயணி கை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சஞ்கரீ சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கி என்று
ஆயாகியாகீ உடையாள் சரணம் அரண் நமக்கே.

ஓம் குண்டலி புரவாசினி சண்டமுண்ட விநாசினி
பண்டிதஸ்ய மணோன்மணி வராஹி நமோஸ்துதே
அக்ஷ்டலட்சுமி சொருபிணீ அக்ஷ்டதாரித்ய நாசினி
இக்ஷ்டகாம்ய ப்ரதாயினி வராஹி நமோக்ஷ்துதே.

## திருப்பள்ளி எழுச்சி

கருத்தில் நின்ற கணபதனை கைதொழுதிட ஒருகுறை யேதுமில்லையே! பைரவன் துணையே, பவள வாய் செல்வியே! மாமயிலையில் உறைபவளே நவமணி நாயகியே திரு பூஜை தொடங்கும் அந்திநேரம் திருபாபள்ளி எழுந்தருள்வாயே!

மரமத கோட்டை தன்னில் மாணிக்கமே, உன்னை வைத்து மணமிகு பன்னிருடன் பால் தேனோடுஅபிஷேகம் ஆராதனை செய்து சீரான பட்டு துகிலுடுத்தி, பிச்சிசண்பகம், அரளி மாலை யோடு, பூசை ஏத்திடவே திருப்பள்ளி எழுந்தருள்வாய்

வர்த்தாளி எழுகவே. ஆஞ்சா எழுகவே சேனை எழுகவே மாமயிலை பீட நாயகியே ஏழுகவே மகேசன் போற்றும் மகாவராக்கியே எழுக எழுகவே!

## வராஹி அந்தாதி

பழங்கால ஓலைசசுவடிகளில் கண்டறியப்பட்ட இந்தஅந்தாதியை தினமும் பக்தியுடன் படித்து மஹா வராஹியைத் துதித்தால் எல்லா நன்மைகளும் உண்டாகும் என்பது மயிலை வராஹி வாக்குப்பிடத்தில் அருளப்பட்ட வாக்கு. எனவே இந்த அந்தாதியை தினமும் படித்து வராகி தாயின் திருவருளைப் பெற்று உய்யுமாறு அன்பர்களை வேண்டுகின்றோம்.

## ஆனை முகத்தான் வாழ்த்து

பக்தர்கள் பாதமணி சின்மய போற்றி பணிந்தடியேன்
நித்தம் வராஹி உமைமேல் அந்தாதி நினைந்து சொல்ல
முந்தி வந்து அருளே கொடுக்கும் நலமுள்ளவனாம்
அத்தன் கரிமுகன் குருகுருவான மேனியன் காப்பதுவே.

## நூல்

குருவருள் என்றும் மறவாமல் யானும் குழந்தை
பருவமாகத் தொழுதனன் போற்றி பணிந்து அடியேன்
சருவ கலையும் மிகவே புரிய தயவு வைத்து
செருபமதாய் வந்தருள்வாய் வராஹி சுந்தரியே (1)

சுந்தரி துரந்தரி அபிராமி மாலினி சூலி என்க
கந்தனைப் பெற்ற மனோன்மணியே கடைக்கண்ணியாம்
சொந்தமதாய் வந்தடியேன் தனக்கு
எந்தெந்த வேளையும் காப்பாய் வராஹி இமையவளே (2)

இமையோர்கள் வாழவென ஈரெழு லோகமும் இமைப்பளவில்
உமையாக வந்து உதிப்பவளே உன்னைப் போற்று மனம்
சமயங்கள் தோறும் கலாதரும பொருள்தான் கொடுப்பாய்
அமையாத கல்விக் கடலே வராகி எனும் அம்பிகையே (3)

அம்பிகையே நின்னை அல்லாது வேறிந்த அம்புவியில்
நம்பி ஒரு தெய்வம் போற்றும்கலேன் நமனார் வெகுண்டு
தும்பிக்கை போல பாய்ந்தெனை வந்து சூழ்ந்து கொண்டால்
அம்பிகையே வந்தடியேனை ரட்சித்து ஆண்டருளே (4)

அருளான ஞான ஒளியே உலகில் எனை ஆளவந்த
பொருளான கல்வி தந்த கடலே நினைப்போற்றும் அன்பர்
இருளாகிய துயரேதும் வராமல் எனதென்று முன்னீ
மருளாமல் வந்தென்னைக் காப்பாய் வராஹி மலர்கொடியே (5)

கொடியே வெஞ்சுடர் கோமானிடத்தில் கொலுவிருக்கும்
வடிவே மெய்ஞானம் தரும் பொருளே உன்னை வாழ்த்த நித்தம்
அடியேன் எழுந்து நின் பாதாரவிந்தத்து அருள் பெறவே
பிடியே விடாமல் எனைக் காக்க வராஹி பிறைநுதலே (6)

முழு முதலே நின்னை அல்லாது வேறெந்த மூடர் தம்மை
தொழுதே புகழ்வது இல்லை ககனதாயிரத் தொல் புவியில்
முழுதாகவே என்னை உதாசினத்தோர்கள் பயந்தொடுங்க
முழுநீள சூலம்மிகுவாள் வராகி என் முன்பின் நின்றே (7)

நின்றே உனது கழலே நினைந்து முன்னான்
அன்றே கருவில் அமைத்தவளே என்னுள் இல்லாதவிதம்
அன்றே கனக மயமே அருளைத் தரு கோமளமே
அன்றே முக்கோண ஒளி விளக்காய் நின்ற ஈஸ்வரியே (8)

ஆசனம் பாகத்து அமர்தயாபரியே இந்த நாவினில் இருந்து
ஆசுக் கவிதை மிகக் கொடுப்பாய் உன் அடிமைதனை
ஏசுவார் தன்னை குடலைப் பிடுங்கி இயல்புடனே மாலை இடுவார்
வீசிய மாலையிடுவாள் வராகி சொல் விண்ணப்பமே (9)

விண்ணப்பமென்று ஒன் கண்ணப்ப எச்சில் விரவிய நன்னாள்
எண்ணப்பாதி நன்றென்று இறைச்சியைத் தானுண்ட சிவசக்தி
விண்ணத்தப்பாத உன் அடியேன் என்னையே சுவர்த்தன்
கண்ணனைப் பாடிட இங்கு ஏகுநீ வராஹி கமலக் கண்ணியே (10)

யல்கண்ணியே நின்னை அல்லாது வேறிந்த காசினியில்
யல் துணையான் என்று அணுகி நில்லேன் அம்மா எனக்கு
செயல் துணை தந்து உன் மீதில் நான் கவி செய்குதற்கு
லத் துணையாக இருப்பாய் வராகி இளம்கிளியே (11)

கிளியே நகரில் என் ஒளியே உனது கிருபை தந்து
எளியேனை ரட்சிக்க வேணும் அம்மா இமவான் மகளே
களிகூர்ந்து திருந்து தண் பாதத்தைப் போற்ற கருணைபுரி
களாபரி அடியேனை ரட்சித்து ஆண்டு கொள்ளே (12)

ஆண்டு கொண்டென்னை என்நெஞ்சத்திருந்துஉன்அருள்கொடுத்து
நீண்டு உன் மீதில் அந்தாதி பாட விருப்பமுற
துண்டுதலாய் நின் அடியார்க்கு உதவும் சுந்தரியே
கண்டு வரம் தந்து எனையும் காப்பாய் வராகி என்றென்றுமே (13)

என்றென்றும் ஈசன் இடத்தில் குடிகொண்டிருக்கும் தாயே
என்றென்றும் எந்தன் உளம் கலாமாலினி சிவகாமி
என்றென்றும் பாடுதற்கே அருள்தர எந்நாவிலிரு
என்றென்றும் வாழ்க அருள்தா வராகி என எண்ணுநெஞ்சே (14)

நெஞ்சே ஒளிர் உன் நாமத்தை என்றும் நீள்வீழவைத்து
அஞ்சாமல் போற்றி தொழுது இருப்போர் தன்னை
அஞ்சாமல் வந்த உதாசீனித்தோர்கள் அவரை
பஞ்சாய் படுத்திவிடு நீ வராகி பராசக்தியே (15)

பராசக்தி ஈசன் வாமாசனத்தின் நரபார்வதி
தராதரமேழையும் ஆளும் மனோண்மனி தற்பரை
மாஆம் ஏழையும் மோகிக்க திருமால் தங்கை
புரந்தரி எங்கள் வராகி தனபாரத்தை போற்றுவதே (16)

போற்றி தினம்தினம் நாள்தோறும் உன்பதம் போற்றுதற்கு
மாற்றிப் பிறவி மயக்கத்தை நீக்கி மனதினுள்ளே
ஏற்றிய தீபச்சுடரொளியே ஒருபால் இருந்துமுற்றி
காத்து ரட்சித்து அருள்வாய் வராகி கவிக்கடலே (17)

கவிக்கடலே என்னைக் காத்தருளே எந்தன் கருமம் அவி
தவிரக் கருணையாய் இங்கு குலாவி உனைத்தாள் வணங்கும்
செவிக்கற்று திக்கற்று யான் இணைகள் தொழத் தினம் முகரத்து
அரசி புவிஏழையும் இருந்தருளப் பூட்டவியே (18)

பூட்டியவன் கலி நெஞ்கலாதிருந்து பூரணமாய்
காட்டுவள ஞான கவிக்கடலே கவி பாடுவதற்கு
பாட்டு வளரல் அருளே தானே என்நாவில் வந்து உற்பனமாய்.
நாட்டுடையாள் என்வராகி தனம்தனை நாடுதற்கே (19)

நாடுவது உன்னருள் அல்லாது வேறொன்றும் நாடுகில்லேன்
பாடுவதும் உந்தனை அல்லாது வேறுபகன்றறியேன்
தேடுவது உன் அருளாகும் கண்டாய் திருக்கோணமுள்ளே
கூடும் ஈறைந்துள்ளாளே வராகி குலக்கொழுந்தே (20)

கொழுந்தே என் நேயம் நானுடன் மாதுமுகம் கூறி வெருண
எழுந்தே தொந்தோம் என்றாடியபோது சிவனாருடைய
எழுந்தே கழற்றி வானத்தில் விட்டெறிந்தது இந்துமுப்போ
குழைந்தே மனது கவிழ்த்தாய் சபைதனில் கோமளையே (21)

கோமளையே என்று அனுதினமும் உன்னை பூசிப்பவர்க்கு
யாமளையே வந்தருளே கொடுப்பாய் நாநாசிரமும்
சாமளையே உன்னை வைத்திருந்தார் ஏத்த தன்மைபோல்
கோமளையே எண்ணில் அகலாது உனதருள் கொடுத்திருப்பாய் (22)

கொடுப்பாய் மனம் வந்து பாசத்தை வீசி கணமே இடர்போக
விடுப்பாய என்னையும் உன்னருமை அறியாத வேளை
தடுப்பாய் உனது வெண் நீறாதனால் பகைவதைப்பாய்
கொடுப்பாய் விடுப்பாய் வராகி துணை செய்வாயே (23)

துணை செய்வாள் என்னைத் தூசனை சொல்லும் துட்டர்தமை
கணையுடன் வில்லும் நற்சூலமும் கொண்டு ஏத்தி கபாலத்தினையே
ஏனை அதுவாக நிணத்தை உண்டு எலும்பொடித்து
மண்ணில் வைத்து அரைப்பாள் வராகி மனோன்மணியே (24)

முணியே உனது கருணை இறங்கிமனம் குழைந்து
பிணியே தவிர எனை ஆட்கொள்வாய் நனியனா முடிமேல்
அணியே உனதருளை யான் மதியாமல் அனுதினமும்
பணியாத போதும் காத்தருள் தந்தே எனை முற்றும் பாலிகையே (25)

பாலிக்கும் ஐமுகன் பாங்காசனத்திற் பார்வதியே
பாலிக்க நேரிடுவோர் பலனை பிரதிவாதிக்கும் கொடுத்தாள
கூலிக்கும் மண் சுமந்த சொக்கர் சேர்பிறை கூர் முடித்தாய்
சாலிய வாகனத்தே பகைநொய் ஜெயசங்கரியே (26)

சங்கரி மாதங்கி சாமளை கோமளை சாமுண்டித்தாய்
பொங்கழுதாகும் வடிவே எனைக் காக்க இப்பூவுலகில்
சங்கமும் வேடமும் தானே தரித்து இத் தருணமே
செங்கை வளைகள் கலீரிடவே நடஞ்செய்குவாளே (27)

செய்குவன தன்னடியார்கள் தினம் நற்சிந்தையுற்று
செய்வதைப் பார்த்து சிரித்தே இருப்பாள் மறை பொருளாய்
தையல் அபிராமி என் நாவில் தரித்து சகலம்
உய்ய வரமருளும் அம்மா வராஹி என்று எழுதாமறையே (28)

மறையே உதிக்கும் நட்சத்திர மீனின் பிரபலனாய்
மறையோர்கள் காண்பதரிது கண்டாய் உன் மனம் மகிழ்ந்து
குறையொன்றும் வாராமல் அடியேனைக் காக்கும் குலாதரியே
முறையாக வந்து தினம் காப்பாய் வராகி முழுமுதலே (29)

உற்பனமான பொருளே நிணைந்து அடியேன்
சொற்கவிதானொன்றும் சோராமல் பாட உயர்கவி
அற்புதமாக படித்தோர்கள் செல்வம் அருகத்துப் போல்
கற்பகம் போலத் தழைத்தோங்கவே என்றும் காத்தருளே (30)

காத்தருளாதி வராகி அந்தாதி கவிஉளம் தந்தோன்
யாதாகி நல்ல சிவன் ஊழி வாழி இம்மாநிலத்தில்
தத்துவமாக படித்தோர்கள் வாழ்தி நான் மறையோடு
கோத்திரம் வாழி என்னம்மை அருள் வராகி குருவருளே (31)

## வராகி மாலை

வராகி மாலை அன்னையின் உபாசர்களுக்கு ஓர் இனிய வரப்பிரசாதம் ஸ்ரீசுந்தரேச சர்மா அவர்களால் தொடுக்கப்பெற்ற **32** பாடல்களே அண்மைக் காலம் வரை அன்னையின் உபாசகர்களால் துதிக்கப்பட்டது. இந்நிலையில் அன்னையின் அருளால் சென்னை தொல்பொருள் ஆராச்சித்துறை ஓலைச்சுவடி அருங்காட்சியகத்தில் கூடுதலாக 22 பாடல்கள் கிடைக்கப்பெற்றது. அதனையும் இணைத்து 54பாடல்களாக அச்சிட்டிருக்கின்றோம். மேலும் விநாயகர் துதியும், வராகி தேவியின் அருட்கணவராக வேதங்களில் குறிக்கப்பட்டுள்ள வடுக பைரவர் துதியும் கண்டறியப்பட்டு அருளப்பட்டுள்ளன.

### விநாயகர் துதி

ராகம் - நாட்டை

பெருக்கும் கருணை வராகிதன் மாலையை பேசுதற்கு
நெருக்கு விழுலை அம்பிகை வாமம் நிறைந்து மகிழ்ந்து
இருக்கும் பரமனஞ்சு தல அங்குச பாசமுசலேந்தும்
கருச்சுமந்த களப வினாயகன் சேவடி காப்பதுவாம். (1)

### வடுக பைரவர் துதி

ராகம் - வசந்தா

நாகரீகம் சேர்குளந்தை நகர்வாழ்முத்து வடுகநாதனை
தோகைநீ அழைத்துவாடி அல்லும் பகலும் செங்கரும்புவல்லை
எடுத்து தோள் மீதில் முல்லைக்கணை தொடுத்தான்
என்று உளம்மிக வாடுதடி (2)

வாடை மிகுந்திடும் சொர்ணமேடை மேல் இருவோருங்
கூடிவிளையாட மனந்தேடுதே நான் என் செய்வேன்
தேசபுகழ் குருபுத்திரன் செந்தமிழுக்கு உபகாரி
சிவனாம் பூபனமைந்தனாம் முத்துவடுகநாதனையே (3)

தோகையே நீயழைத்துவாடி நான் கொண்ட மோகமினி சகியாதடீ
ஆர் சொன்னாலென்னடி அவன் தயவே பதினாயிரம் பொன்னடி

போர்மன்னன் வணங்கும் இஷ்டனோடு உவக்கும் பெண்திறன்
போசனம் மருவித்தந்த ஆசை மயம்மத்துக்கு யார் (4)

**வசீகரணம் (தியானம்)** ராகம் -கௌளை

இருகுழை கோமளம் தாள் புகூஷ்பராகம் இரண்டுகண்ணும்
குரு மணி நீலம் கை கோமேதகம் நகம் கூர்வயிரம்
திருநகை முத்துக் கனிவாய் பவளம் சிறந்தவல்லி
மரகத நாமம் திருமேனியும் பச்சை மாணிக்கமே (5)

ஆராதனை செய்து, அர் ச்சித்து பூஜித்து அடிபணிந்தால்
வாராதவள் அல்லவே வந்தவள் பிணி நோய்
தீராதவள் அல்லவே அல்லவே தநியேனை முகம்
பாராதவள் அல்லவே அல்லவே பரமான பராபரையே (6)

**வேறு** ராகம்-தோடி

தோராத வட்டம் முக்கோணம் ஷட்கோணம் துலங்கு வட்டத்து
ஈராறிதழ்இட்டு ரீங்காரம் உள்ளிட்டு அதன் நடுவே
ஆராதனை செய்து அர்ச்சித்து பூஜித்து அடிபணிந்தால்
வாராதிராள் அல்லவோ அலைஞான வராஹியுமே (7)

காணத் தவம் பல ஈட்டுவார்க்கு கருணை செய்வாள்
ஞானத்தவள் இவளாகும் கணமூர் தவமாகி நவ
கோணத்துள்ளே வந்துருக்கொண்டிருந்த குமரி பஞ்ச
பாணத்தவளே என்னை ஆளும் செம்பராபரையே. (8)

அலை முசலம் தண்டு உலக்கை அங்கையில் சங்காரி ஏவ
கலை மதியும் சடை மேலிருந்து சிலை நுதலின் கீழ்
மாவடுகொள் கண்ணாள் வராகியெனும் குளிகை
நாவடிக்கு உண்டே நமக்கு. (9)

**எதிர்ப்புக் கட்டு (சத்ருஹறம்)** ராகம்-அடானா

நாசப் படுவர் நசுங்கப்படுவார் நமன்கயிற்றால்
வீசப் படுவர் வினையும் படுவர்இம் மேதினியார்
ஏசப் படுவர் இழுக்கும் படுவர்என் ஏழைநெஞ்சே
வாசப் புதுமலர்த் தேனாள் வராஹியை வாழ்த்திலரே. *(10)*

**வெகு வச்யம் (திரிகாலஞானம்)** ராகம் -நாதநாமக்ரியா

வாலை புவனை திரிபுரை மூன்றும்இவ் வையகத்திற்
காலையும் மாலையும் உச்சியும் ஆகஎக் காலத்துமே
ஆலயம் எய்தி வராஹிதன் பாதத்தை அன்பில் உன்னி
மாலயன் தேவர் முதலான பேர்களும் வாழ்த்துவரே. *(11)*

**பகைமுடிப்பு (வித்வேஷணம்)** ராகம் -வராளி

வருத்திப் பகைத்தீர் என்னோடறியாமல்முன் வானவர்க்காகச்
சிரித்துப் புரம்எரித்தோன் வாம பாகத்துத் தேவி எங்கள்
கருத்திற் பயிலும் வராஹிஎன் பஞ்சமி கண்சிவந்தாற்
பருத்திப் பொதிக்கிட்ட தீப்பொறி காணும் பகைத்தவர்க்கே. *(12)*

பயமேதுமில்லை உமையாள் உண்டு என்பவர் பங்கில்
செயமே புர்ந்திடு மாது உமையே என்னை வாழ்வித்தாய்
உயர்மேலுயர்ந்த கயிலாயம் சேரஉகந்து நல்கி
சியமை கொடுப்பவள் வராகி உண்டே இச்செகத்தினிலே *(13)*

சிங்கக்கரடி சிறுபுலிவேங்கை செந்நாய் அரவம்
அங்கம் பெருத்த மதயானை என்முன்னே ஏது வந்தால்
பங்கப்படுத்தி பதினாலு துண்டம் படத்துணிப்பாள்
துங்கவல்வேளை எறிந்தவராகியை நான் நாடுவேன். *(14)*

நிறை சேர் கமலத்திருக்கும் வாாகியென்றே நினைந்து
நிறைசேர் கமலமது ஓடையீர் நமன் கலந்து

பிறவேதனைபட்டு உள்ளன்பு கூர்ந்து பிறிவது அஞ்சீர்
பகையாய் திருக்கத்தரையாய் முடிப்பவள் பகைஞரையே (15)

**வாக்கு வெற்றி (சத்ரு மாரணம்)** ராகம் - சங்கராபரணம்
பாப்பட்ட செந்தமிழ்ப் பாவணர் நின்மலர்ப் பாதம் தன்னிற்
பூப்பட்டதுவும் பொறிப்பட்டதோ? நின்னையே புகழ்ந்து
கூப்பிட்டது உன் செவி கேட்கவில்லையோ? அண்ட கோள மட்டும்
தீப்பட்டதோ? பட்டதோ நிந்தை யாளர்தெரு எங்குமே. (16)

**தேவி வருகை (பூதபுநதனம்)** ராகம் -ஆனந்தபைரவி
எங்கும் எரியக் கிரிகள் பொடிபட எம் பகைஞர்
அங்கம் பிளந்திட வண்மண் கிழிந்திட ஆர்த்தெழுந்து
பொங்கும் கடல்கள் சுவறிடச் சூலத்தைப் போகவிட்டுச்
சிங்கத்தின் மீது வருவாய் வராஹி சிவ சக்தியே. (17)

காணா இடத்தினும் கண்ட இப்போதும் கருதியென்னை
பேணார் வம்பு பெற்று பேணோ பிடித்தடித்து
கீழனுக்கு மூக்கு செவி வாக்குப் பிச்சு கிழித்துதறி
வாணாளை வாங்கும் வராஹி கண்டீர் நம் வழித்துணையே. (18)

நேர்ந்து ஒடுங்கும் கடல் சூழ்ந்த கோளமும் நைந்து உரி
வெந்தொடுங்கும்படி நீ செய்தனை விடையோ நெடுமால்
வந்தொடுங்கும் கமலாலய தொண்டர் கோன் இறைஞ்சி
வந்தொடுங்கும் பதத்தாள் சிவ மோகன மாதங்கியே. (19)

**தேவி தாபனம் (பில்லி மாரணம்)** ராகம் - ஹிந்தோளம்
நெஞ்சகம் தன்னில் நிறைந்திருக் கின்றவள் நிர்குணத்தி
நஞ்சணி கண்டத்தி நாரா யணிதனை நம்புவதற்கு
வஞ்சனை பண்ணி மதியாத பேரைவாழ் நாளை உண்ணக்
கொஞ்சி நடந்து வருவாள் வராஹி குலதெய்வமே (20)

உலக்கை குரலொன்று செய்யாதிருக்கிலும் உள்ளதன்பால்
இலக்கை கிடுவர் வாய்களெல்லா ஏழு உலகமெல்லாம்
வலக்கை யிடக்கை யமக்கடி மாத்தி வருகையிலும்
உலக்கை குரல் கொண்டு குத்திவிட்டாள் பல்லுகிற் பைரவியே (21)

ஏந்தினைப் பெண்ணின் முகத்தில் வராஹியன்றெண்ணி எத்த
மாய்ந்தவர் பங்கிலிருப்பவளே அடியேன்தனையும்
காய்ந்திடுவார் மனம் புத்தி கலங்கிடவே
பாய்ந்திட நல்ல வராஹி யுண்டென்றும் பயமில்லையே. (22)

**வராஹி அமரர்தல் (மூர்த்தி தியானம்)** ராகம் - ஆரவி

ஐயும் கிலியும் எனத்தொண்டர் போற்ற அரியபச்சை
மெய்யும் கருணை வழிந்தோடுகின்ற விழியு(ம்) மலர்க்
கையும் பிரம்பும் கபாலமும் சூலமும் கண்எதிரே
வையம் துதிக்க வருவாள் வராஹி மலர்க்கொடியே (23)

ஐயுங்கிலியும்சவ்வும் உனதருளாகி நித்தம்
மெய்யுங்களம் வெளிப்படுவாய் வெண்மலரையொத்த
கையின்பிரம்பில் கபாலத்தில் சூலத்தில் என் கண்முனமே
வையம் துதிக்க வருவாள் வராஹி மலர்க்கொடியே (24)

**வரம் பொழிதல் (எதிரி மாரணம்)** ராகம் - ஹுசைனி

தாளும் மனமும் தலையும் குவலையத்து அரியலர்கள்
மாளும் படிக்கு வரம் தருவாய்: உன்னை வாழ்த்தும் அன்பர்
கோளும் பகையும் குறியார்கள் வெற்றி குறித்த சங்கும்
வாளும் கட்கமும் ஏந்தி வருமெ துணையே! (25)

வாழி செந்தாமரை சிறிதனத் தாமரை வண்ணவழுக்கு
ஆழி திருநெடுந்தேள் அணங்கே மலர்சேர் கமலத்
தாழிற்கு வகை மதுமாலை சூடி நின்தாள் பணியும்
மாழி தனக்கு இலக்கு ஆரோ அறிவது அறிந்திலரே (26)

**வாழ்த்துதல் (உகை மாரணம்)** ராகம் -மோகன கல்யாணி

வருந்துணை என்று வாராஹி என்றன்னையை வாழ்த்திநிதம்
பொருந்தும த்கைமையைப் பூணா தவர் புலால்உடலைப்
பருந்தும் கழுகும்வெம் பூதமும் வெய்ய பிசாசுகளும்
விருந்துண்ணப்பட்டு கிடப்பர்கண்டீர் உடல் வேறுபட்டே. (27)

சூலிகபாலி மகமாயி சுந்தரி சுந்தரியாள்
வாலி புவனை திரிபுரை நாயகி மாதங்கியே
சாலவு நம்பி சராணாகதியென்று சார்ந்தவர்க்கு
மலரவன் நங்கை மலரடிதந்தருள் வாழ்த்துபவளே. (28)

**நன்னீர் வழங்கல் (ஏவல் பந்தனம்)** ராகம் -கீரவானி

வேறாக்கும்நெஞ்சும் வினையும்வெவ்வேறு வெகுண்டுடலம்
கூறாக்கும் நெஞ்சத்திற் செந்நிறம் ஆன குருதி பொங்கச்
சேறாக்கும் குங்குமக் கொங்கையிற் பூசும் திலகம் இடும்
மாறாக்கும் நேமிப் படையாளத் தளைவணங்காதவர்க்கே. (29)

சக்தி கெவுரி மகமாயி ஆயியென் சத்துருவை
குத்தி அரண் குடலைப்பிடுங்கிக் குலாவி நின்று
எத்திசை எங்கும் நடுங்கக் கிரிகள் கிடுகிடென
நித்த நடித்து வருவாள் வராஹி எள் நெஞ்சத்தே (30)

மேல்ப் பெத்த செம்பொற்க் கிரியினுள்ளோர் உயிர்மேதினில்
வாய்ப்பத்த மந்திரம் நின்பதமோ மயில்வாகனனை
சூல்பத்து மாதஞ்சுமந்து நன்றாய் பெற்ற சுந்தரியே
நாற்பத்து மூன்று திரிகோணமும் பெற்ற நாயகியே (31)

**மலர் வழிபாடு (கர்ம வாஸனை நாசனம்)** ராகம் - தேக்ஷ்

தாமக் குழலும் குழையும் பொன் ஓலையும் தாமரைப்பூஞ்
சேமக் கழலும் துதிக்க வந் தோர்க்கு ஜெகம்அதனில்
வாமக் கரள களத்தம்மை ஆதி வராஹிவந்து
தீமைப் பவத்தைக் கெடுத்தாண்டு கொள்வாள் சிவசக்தியே. (32)

நெஞ்சகந் தன்னில் நிறைந்தேயிருக்கின்ற நிற்குணத்தி
நஞ்சணிகண்டத்தி நாராயணத்தி நம்மடியார் தமக்கு
வஞ்சினை செய்து மதியாத பேனார் வாணலை உண்றான்
கொஞ்சி நடந்து வருவாள் வராகி கோமளையே (33)

**தேவி சன்னிதானம் (கர்ம மூல பந்தனம்)** ராகம் - தன்யாசி

ஆராகிலும் நமக்கேவினை செய்யின் அவர் டலும்
கூராகும் வாளுக் கிரைஇடுவாள் கொன்றை வேணிஅரன்
சீரார் மகுடத் தடிஇணை சேர்க்கும் திரியுரையாள்
வராஹி வந்துகுடிஇருந்தாள் என்னை வாழ்விக்கவே. (34)

சிந்தித் தெழுந்து நினைந்தேத்திப் போற்றி தினந்தோணாது
அந்தி பகலுன்னை அர்ச்சித்த பேர்களை ஆதண்டமா
நிந்தனை செய்து மதியாத பேரை நிணம் பிடுங்கி
புந்தி பிளந்து வருவாள் வராஹியென் பொற்கொடியே. (35)

பொற்கொடி வள்ளியுமை அம்மை கானபுனக்கு நத்தி
நிறக்கலி நீலி நராதரியென்று நினைந்தவற்கு
சற்பினை பண்ணிச் சாதிக்க என்றென்றும் மாதர் இயலார்
பற்பமதாக யெறிப்பாள் வராஹியென் பராபரியே. (36)

**தேவி துதிமாலை (ஜன்ம துக்க நாசனம்)** ராகம் - ஹம்சநாதம்

பரியேறுஞ் சொக்கரிடத்தே யிருக்கின்ற பார்வதியே
அரியே யுமையே நற்கண்ணியேஅடியேற்க்குச்
சரியாகவே நின்று தர்க்க சித்தி பேர்களை சங்கரித்து
யெரியாய் யெரித்து விடுவாள் வராஹி நல்யேந்திழையே. (37)

**புகழ்சொற்பாமாலை (மௌனானந்த யோகம்)** ராகம் - ஆந்தோலிக்க

ஊரா கிலும் உடன் நாடா கிலும்அவர்க் குற்றவரோடு
யாரா கிலும்நமக் காற்றுவாரோ? அடல் ஆழி உண்டு
காரார் கருத்த உலக்கையும் உண்டு கலப்பை உண்டு
வராஹி என்னும்மெய்ச் சண்டப் ப்ரசண்ட வடிவும் உண்டே. (38)

வருவினையில்லை வரையில்லைத் தீங்கில்லை வாதையில்லை
யிரு வினையில்லை யிடரிலலைக் கோளில்லை வெளியே எந்தனுக்கே
கருவெனும் பாசக்கடலைக் கடத்திக்கடந்த பின்பு
திரிபுரையென்றே சருசசஞ்சீவி யுண்டு நம் சிந்தையுள்ளே. (39)

நவ காரியங்களை வழுவாமல்ச் செய்த போதனற்கு
புவனாபதியும் பொருளுமுண்டே புண்டரீக மலர்
நவகோண முள்ளிட்டு ஓங்காரம் ரீங்காரம் நடுவதிட்டு
சிவகாமி யென்றொரு சஞ்சீவியுண்டு நம் சிந்தையுள்ளே. (40)

**படைக்கல வாழ்த்து (பதஞான யோகம்)** ராகம் - அசாவேரி

உலக்கை கலப்பை ஒளிவிடு வாள்கட காழிசங்கம்
வலக்கை இடக்கையில் வைத்து வராஹியின் மாற்றலர்கள்
இலக்கம் இல்லாத எழிற் பெரும் சேனை எதிர்வரினும்
விலக்கவல்லாள் ஒரு மெல்லிதழின் பாதம் விரும்புகவே. (41)

அஞ்சு அட்சரம் கொண்டு கோடாலி கொண்டு அரும் புனக்கமாய்
வஞ்சக்கடுயூர் மனத்தைத் தெரிமதியாமல் உழுது
மிஞ்சத்திருத்தி சதாசிவ மிணங்கி நன்று வித்தையிட்டு
புஞ்சைகளைப் பறிப்பாள் வளர்ப்பாள் சிவபோதத்தையே. (42)

நினைத்தவற்க்கு சத்துரு கற்றோருக்கு நின் மலர்க்கு
சேணத்தவர்க்கும எட்டாத பொறுத்தாள் என் சிறத்தில் வைத்து
காணப் பதந்தரும் அருள் கொண்டாள் என்னைக் காக்கும் நவ
கோணம் தந்தவள் இவளே என்னையாளும் குல தெய்வமே. (43)

**அடியார் வாழ்த்து (அர்ச்சனாநந்த யோகம்)** ராகம் - கல்யாணி

சிந்தை தெளிந்துனை வாழ்த்திப் பணிந்து தினம்துதித்தே
அந்தி பகல் உன்னை அர்ச்சித்தபேரை அசிங்மாய்
நிந்தனை பண்ணி மதியாத உலுத்தர் நிணம் அருந்திப்
புந்தி மகிழ்ந்து வருவாய் வராஹிநற் பொற்கொடியே. (44)

தாமக் குழலும் குழையும் பொன்னே அலையும் தரளமணியே
ஏமக் கந்தன் பாரமும் காண உன்முன் வந்தாயிலையே
வாமக் கன்னி இன்று வாவென்ற போது எனை வந்தணைநின்
ஆண் மக்களோடு சொல் கவிராசனும் அபிராமனுமே. (45)

**திருப்படை வந்தனம் (அம்ருதானந்த யோகம்)** ராகம் - பாகேஶ்ரீ
பொருப்புக்கு மாறுசெய் ஆழியும் தோடும் பொருப்பைவென்ற
மருப்புக்கு நேர் சொல்லும் கொங்கையும் மேனியும் வாழ்த்தும் என(து)
இருப்புக்கு கூடிய மனதிற் குடிகொண்டு எதிர்த்தவரை
நெருப்புக்கு குவால்எனக் கொல்வாய் வராஹி என் நிர்க்குணியே. (46)

**வேறு**

பொறுப்புக் கண்டீர் இவளால் அழியும் தொடும் பொருப்பைவென்ற
மருப்புக் கண்டீர் பகிரண்டங்களைத் தொழுத்தொறு நன் மனங்கலங்கி
யிருப்புக் கண்டீர் இவள் நம்மோடு எதிர்த்தவர் தம் குடிக்கு
நெருப்புக் கண்டீர் அயரா மனமாக நேர் நின்றவர்க்கே. (47)

**பாதமலர் வந்தனம் (கைவல்யானந்த யோகம்)** ராகம் - சுத்ததன்யாசி
சீரிட்ட நின் மலர்பாதார விந்தத்தை சிந்தை செய்து
நீரிட்டவற்க்கு வினை வருமோ நன்னடியவர் பால்
மாரிட்ட வரை அலகாயுங் கொண்டு மாறு செய்து
கூரிட்டு எரியவருவாள் வராஹி நம் குலதெய்வமே. (48)

**சித்தி வந்தனம் (ஆனந்த யோகம்)** ராகம் - சண்முகப்பிரியா
நரிபரி ஆக்கிய சம்புவின் பாகத்தை நண்ணியமான்
அரி அயன் போற்றும் அபிராமி தன் அடியார்க்கு முன்னே
சரியாக நின்று தருக்கம்செய் மூடர் தலையை வெட்டி
எரியாய் எரிந்து விடுவாள் வராஹி எனும் தெய்வமே. (49)

**நவகோண வந்தனம் (நித்தியானந்த யோகம்)** ராகம் - சக்கரவாகம்
வீற்றிருப்பாள் நவ கோணத்திலேநம்மை வேண்டும் என்று
காத்தருப்பாள் கலி வந்தனுகாமல்என் கண்கலக்கம்

பார்த்திருப்பாள் அல்லள் எங்கேளன்று அங்குச பாசம் கையில்
கோத்திருப்பாள் இவளேஎனை ஆளும் குலதெய்வமே. (50)

நடுத்திருப்பாற் கடலே துயில் வாள் என்னை நாடிமுகம்
கடுத்திருப்பாள் அலலன காய்த்திருப்பாள் என்னை காய்ந்தவரோடு
தடுத்திருப்பாள் தம் அடியார்வினை மாற்றியருள்
கொடுத்திருப்பாள் இவளே என்னை ஆளும் குலதெய்வமே. (51)

**நிறைமங்கலம் (சிவஞான போதம்)** ஸ்ரீ ராகம்

சிஞான போதகி செங்கைக் கபாலி திகம்பரிநல்
தவம்ஆரும் மெய்யன்பர்க் கேஇடர் சூழும் தரியலரை
அவமானம் செய்யக் கணங்களை ஏவும்அகோரி இங்கு
நலமாக வந்தென்னைக் காக்கும்திரிபுர நாயகியே. (52)

மயிலே குயிலே மாணி அகங்காரி
ஒங்கார சக்தி உல்லாச கோரி
சித்தப் பிரசித்தி சிவவாக்கிய காளி
மத்தப் ப்ரமத்தி வராஹி மாரணம். (53)

மாணிக்கம் பச்சை வைடூரியத்தி மரகதத்தி
ஆணிக்கனக நிறத்தி பஞ்சாட்சரி அட்சரத்தி
பேணிக் கமலப் பதந்தொடு வார்க்குப் பிரசித்தமாய்
தோணிக் கடாட்ச மருள்வாய் திரிபுர சோதியளே. (54)

ராகம் -மத்தியமாவதி

பம்பை முழங்க பறைதொலி அதிர கிம்புர நாரதர் கீதம் பாட
செண்டை மழங்க நாவால் பாட தண்டை குலுங்கச் சரங்கள் அசைய
தண்டினி தேவி தளர் நடமிடவும் வந்த வெறும் பகை வலிந்து புறம் தர
போக்கிடம் அவள் பதம் புரிந்து பணிந்தோர் வாக்கினில் அருள்வாள்
வராஹிஉமையே.



## மயிலை வராஹி வாக்குப்பிடம் சாக்த ஸ்ரீ மகேசுஷ்ராம் அருளிய அன்னை ஸ்ரீ வராஹி 108 போற்றி

### கூட்டு வழிபாட்டு முறை

ஒவ்வொரு பேற்றியுடனும் முதலில் ஓம் வராஹி சரணம் வராமுகி சரணம் எனவும் இறுதியில் போற்றி எனவும்

அன்னை வராஹியே போற்றி
ஆனந்தம் தருவாய்வராஹியே போற்றி
இன்னலை களைவாய் வராஹியே போற்றி
ஈசுவர வடிவே வராஹியே போற்றி
ஊழ்வினை களைவாய் வராஹியே போற்றி
உன்னருள் தருவாய் வராஹியே போற்றி
அகிலாண்ட நாயகியே வராஹியே போற்றி
அகிலத்தின் அரணே வராஹியே போற்ற
புவி சிறக்க அருள்வாய் வராஹியே போற்றி
அன்பர் தம் வேண்டுதல் ஏற்பாய் வராஹிபோற்றி
அண்டியோர்தனை காப்பாய் வராஹியேபோற்றி
திரிபுர சுந்தரி வராஹியே போற்றி
திரிபுரம் எரித்த தேவியே வராஹியே போற்றி
ஆராவமுதே வராஹியே போற்றி
எண் கரம் உடையவளே வராஹியே போற்றி
எந்நிலை தனிலும் எமைக்காப்பாய் வராஹியேபோற்றி
நின்னருள் நன்றே நிலைக்கும்வராஹியே போற்றி
கனவிடைநின்ற கருத்தே வராஹியே போற்றி
சுகம்தரும் ஞானச் சுடரே வராஹியே போற்றி
ஒப்பிலா மணியே உயர்வே வராஹியே போற்றி
சம்காரசூலி சௌந்தரியே வராஹியே போற்றி
சங்கீதவாணி சரஸ்வதியே வராஹியே போற்றி
சந்தோசம் தரும சக்தியே வராஹியே போற்றி
சக்தி வளர்க்கும் சாமுண்டி வராஹியே போற்றி
நெற்றி கண் வளர்க்கும் நீலி வராஹியே போற்றி
பற்றினோம் திருத்தாள் வராஹியே போற்றி
கொற்றவை குமரி கோமளமே வராஹியே போற்றி
கொடுமை குறையும் கோமளமே வராஹியே போற்றி
வீரவேல் அருளிய வராஹியே போற்றி
வேதனை தம்மை விலக்குவாய் வராஹியே போற்றி
சூலம் ஏந்திய சுடரொளி வராஹியே போற்றி
சூழ்வினை களையும்சுந்தரி வராஹியே போற்றி
சாரங்க ஏந்தும்தளிர்க்கை வராஹியே போற்றி

சங்கும் சக்கரம் தரித்தாய் போற்றி
எங்கும் அமைதியை அருள்வாய் போற்றி
திங்கள் ஒளியே! தென்றலே போற்றி
புவியினைக் காக்கம் புவனேஸ்வரியேபோற்றி
போர்ப்படை தலைவி புராதனி போற்றி
புரவி யேறும் பொற் படை போற்றி
நளிர் புதனே அறிவின் தெளிவே போற்றி
வித்தக ஞானவடிவே போற்றி
சீர்மிகு தாயே செவ்வடி போற்றி
சக்கரன் போற்றும் சுடரொளி போற்றி
பிரிதொன்றெண்ணாமனம் தருவாய் போற்றி
சங்கரி சவுந்தரி சக்தி போற்றி
யோகம் அருளும் யோகேஸ்வரி போற்றி
ராகுதேவன் போற்று ராகவி போற்றி
நாக சக்தி நல் அருளே போற்றி
மனமருள் தவிப்பாய்போற்றி
மெஞ்ஞான அருளேபோற்றி
மிக பொருள்யோகம் அருள் போற்றி
வேத வல்லி வத்யா போற்றி
நாதவடிவே நாரயணி போற்றி
நவகோணத்தனுள் உறை நாயகி போற்றி
நல்லறம் வளர்க்கும் பைரவி போற்றி
திருவருள் நல்கும்தேவி போற்றி
வளர் ஒள்சுடரின் வடிவே போற்றி
வெற்றிமேல் வெற்றி தருவாய் போற்றி
சத்தியம் காப்பாய போற்றி
சமத்துவம் அருள்வாய் போற்றி
சங்கடம் நீக்கும் சங்கரி போற்றி
சகல சௌபாக்கியம் தருவாய் போற்றி
சிம்ம வாகன செழுஞ்சுடரே போற்றி
சிறப்புக்கள் தருவாய் செங்திரு போற்றி
மங்கள சண்டி போற்றி
மனை மாடு செல்வம் அருள்வாய்போற்றி

மணியே! மணியே ஒளியே வராஹியே போற்றி
எல்லை நாயகி ஈஸ்வரியே வராஹியே போற்றி
எங்கும் நிறைந்த சுடரே வராஹியே போற்றி
எல்லையல்லா ஆனந்தம் தருபவளே வராஹியே போற்றி
காவல் அருள்வாய் காளி வராஹியே போற்றி
ஏவல், சூன்யம் தொலைப்பாய் வராஹியே போற்றி
காலனை உதைத்த கன்னியே வராஹியே போற்றி
ஞாலம் போற்றும் கோலவராகியே போற்றி
பஞ்சமி பாவை வராஹியே போற்றி
சகம் சுந்தர வடிவே வராஹியே போற்றி
சோதியுள் சோதி சுடரே வராஹியே போற்றி
அண்டசராசரம் துயர் தீர்க்கும் வராஹியே போற்றி
அண்டினோர் துயர் தீர்க்கும் அன்னை திருவடி வராஹியே போற்றி
தண்டைஒலி திருவடி வராஹியே போற்றி
அன்னை ஆதிசக்தியே வராஹியே போற்றி
அருளே அன்பர்தம் திருவே வராஹியே போற்றி
அன்னை வராகி நின் திருவடி வராஹியே போற்றி
எண்கரம் கொண்ட திருவடி வராஹியே போற்றி
ஏதிலார்க்கருள் ஏத்திழையே வராஹியே போற்றி
சண்ட மாருத சேவை சூழ்ந்தாய் வராஹியே போற்றி

மக்கள்நலம் பேணும் தாயே போற்றி
ஓங்கார ரீங்கார ஆங்காரி போற்றி
உளமத்த வைரவன் உளமதில்உறைவாய் போற்றி
களிதருதேனே வைரவி போற்றி
களவிடைநின்ற கோலவராகி போற்றி
தண்டொடு சூலம் ஏந்தும் சாகினி போற்றி
உழுபடைதன்னை உடையாய் போற்றி
ஏழேல் பிறப்பும் எமை ஆள்வாய் போற்றி
சொல்லைங்கரியதனம் தருவாய் போற்றி
மண்ணொடு விண்ணும் நிறைந்தாய் போற்றி
மாதவத்தோர் மனத்துள் வளர்வாய் போற்றி
காசிநகர் தனில் உறைவாய் போற்றி
வாசிக்குதிரைமேல் வருவாய் போற்றி
வளமொடு நலம் தருவாய் போற்றி
யோகியர்தம்முள் யோகினி போற்றி
வளமொடு நலம் அருள்வாய் போற்றி
கிரிவட்டத்தேரில் வருவாய் போற்றி
பயிரொடு அன்னம் புசிப்பாய் போற்றி
மாமலிலை பீடத்துள் வளர் மணிவிளக்கே போற்றி
மகேசுரன் மனமகிழவருவாய் வராஹியே போற்றி

## ஸ்ரீவராஹி அர்ச்சனை

ஓம் சக்தியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே அகிலாண்ட ஈஸ்வரியே போற்றி
ஓம் சக்தியே அக்ஞா சக்ரேஸ்வரியே போற்றி
ஓம் சக்தியே அருளே ஞான வராஹி போற்றி
ஓம் சக்தியே அடியவற்கு அருளும் தாயே போற்றி
ஓம் சக்தியே அருள் அரசி வராஹியே போற்றி
ஓம் சக்தியே அந்தாதியில் உறையும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆற்றல் மிகு வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆட்கொள்ளும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆனந்தம் தரும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆளும் மனோனமணி வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆள்பவள் வணங்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆழியும் ஆழிவராஹி வராஹியே போற்றி

ஓம் சக்தியே ஆனந்த பூஜை ஏற்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆபத்தில் காக்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆறுமுகன் தாயே வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஆசை அழிப்பவளே வராஹியே போற்றி
ஓம் சக்தியே இகபரசுகம் அழிக்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே இளகிய மனம்கொண்ட வராஹியே போற்றி
ஓம் சக்தியே இன்னல் தவிர்க்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே இசைக்கும் இசையே வராஹியே போற்றி
ஓம் சக்தியே இமையவள் துணை வராஹியே போற்றி
ஓம் சக்தியே இருளை அகற்றிய ஒளியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே இடியெனவருவாய் வராஹியே போற்றி
ஓம் சக்தியே இதய நாயகியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே இச்சை அருக்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே இச்சா சக்தி வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஈன்றவர்களைக் காக்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஈகை உள்ளம் கொண்ட வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஈடில்லா தெய்வமே வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஈன்ற தாயே வராஹியே போற்றி
ஓம் சக்தியே உலக நாயகியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே உதவிடும் அரசியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே உமையவள் வடிவே வராஹியே போற்றி
ஓம் சக்தியே உழுபவன் தலைவியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே உழுபடை ஏந்திய வராஹியே போற்றி
ஓம் சக்தியே உயிரே உடலே வராஹியே போற்றி
ஓம் சக்தியே உடலே ஒளியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே உழுதோம் தொழுவோம் வராஹியே போற்றி
ஓம் சக்தியே உயர் நிலை தருவாய் வராஹியே போற்றி
ஓம் சக்தியே உதிக்கும் கதிரே வராஹியே போற்றி
ஓம் சக்தியே உன்மத்த வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஊமத்த பூ சூடும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஊர் காவல் நாயகியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஊக்கம் அளிப்பாய் வராஹியே போற்றி

ஓம் சக்தியே ஈசனுடன் அமர்ந்தாய் வராஹியே போற்றி
ஓம் சக்தியே எங்கள் உள்ளம் அமர்ந்த வராஹியே போற்றி
ஓம் சக்தியே என்றும் கவிபாடவைத்தாய் வராஹியே போற்றி
ஓம் சக்தியே எங்கும் நிலையானவளே வராஹியே போற்றி
ஓம் சக்தியே என்றும் எம்மை வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஏற்றம்தரும் தலைவி வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஏழைகளின் நாயகி வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஏழுபிறப்பையும் அறுப்பாய் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஏவல் தலைவியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஏழ் இசைநாயகி வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஐங்கரன் தாயே வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஐயம் தவிர்க்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஐவர்தாயாம் வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஒப்பிலா மணி வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஒளிதரும் விளக்கே வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஓதுவோர்க்கு இனிய வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஓங்கார நாயகியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஔடத நாயகியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே ஔவைக்கு அருளிய வராஹியே போற்றி
ஓம் சக்தியே கண்ணின் மணியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே கருத்தினல் உறைவாய் வராஹியே போற்றி
ஓம் சக்தியே கற்பகத்தாயே வராஹியே போற்றி
ஓம் சக்தியே கருணைக் கடலே வராஹியே போற்றி
ஓம் சக்தியே கபாலி துணையே வராஹியே போற்றி
ஓம் சக்தியே காசி நகர்தனில் உறையும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே காளியே மாரியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே காண்போரை ஈர்க்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே கிரிசக்ர ரதம் உடைய வராஹியே போற்றி
ஓம் சக்தியே கிளியேந்திய கரமுடைய வராஹியே போற்றி
ஓம் சக்தியே குற்றம் பொறுக்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே குளிர் மதிசூடிய வராஹியே போற்றி
ஓம் சக்தியே கூர்மதி நாயகி வராஹியே போற்றி

ஓம் சக்தியே கேட்டதை தரும் தாயே வராஹியே போற்றி
ஓம் சக்தியே கேள்வி நாயகி வராஹியே போற்றி
ஓம் சக்தியே சங்கடம் தீர்க்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே சக்தி சடாதரி வராஹியே போற்றி
ஓம் சக்தியே சங்கரிகௌமாரி வராஹியே போற்றி
ஓம் சக்தியே சங்கம் வளர்க்கும் வராஹியே போற்றி
ஓம் சக்தியே பஞ்சமி திதி தேவியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே தண்ட நாயகி வராஹியே போற்றி
ஓம் சக்தியே சங்கேத சமயஸ்வரி வராஹியே போற்றி
ஓம் சக்தியே சமய சங்கேதா வராஹியே போற்றி
ஓம் சக்தியே போத்ரிணி சிவவர்தாளி வராஹியே போற்றி
ஓம் சக்தியே மகாசேன அக்ஞா வராஹியே போற்றி
ஓம் சக்தியே மகா காளி வராஹியே போற்றி
ஓம் சக்தியே சக்ரேஸ்வரி வராஹியே போற்றி
ஓம் சக்தியே சதுர்புயமுடைய வராஹியே போற்றி
ஓம் சக்தியே நவக்கிரக நாயகியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே நவசகதி தேவி வராஹியே போற்றி
ஓம் சக்தியே நவமணி நாயகி வராஹியே போற்றி
ஓம் சக்தியே நாராயணி ரூபிணி வராஹியே போற்றி
ஓம் சக்தியே நவராத்திரி நாயகி வராஹியே போற்றி
ஓம் சக்தியே சீதை தாயே வராஹியே போற்றி
ஓம் சக்தியே சியாமளா தேவி வராஹியே போற்றி
ஓம் சக்தியே செல்வ நாயகி வராஹியே போற்றி
ஓம் சக்தியே செங்கோல் தலைவி வராஹியே போற்றி
ஓம் சக்தியே மாணிக்கமே மரகதமே வராஹியே போற்றி
ஓம் சக்தியே மயிலை நாயகி வராஹியே போற்றி
ஓம் சக்தியே செண்பகமே அகிலாண்ட வராஹியே போற்றி!
ஓம் சக்தியே மரகதமே மாணிக்கமே வராஹியே போற்றி
ஓம் சக்தியே மங்கல நாயகியே வராஹியே போற்றி
ஓம் சக்தியே மக்கள் தலைவி வராஹியே போற்றி
ஓம் சக்தியே மகேக்ஷ்வரபூஜை ஏற்கும் வராஹியே போற்றி

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றோமே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணியுங் கனிந்து.

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்கலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடலோட தொடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடிர
வீரட்டா னத்துறை யம்மானே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த 02
செல்வமே சிவபெருமானே
யான் உனை தொடர்ந்து சிக்கன பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது எனியே

01

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்று(ம்) நான் மறக்கேன்;
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவர்
முக்கணா! நாற்பெருந் தடந்தோட்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ணேச்சரத் தானே!

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காற
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

நன்மை பெருகு அருள் நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னு திருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம்
சென்னி மிசை பாதமலர் சூட்டினார் சிவபெருமான்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

கொடியேற்றத் திருவிழா, கொடியிறக்கத்திருவிழா
ஆகியனவற்றில் கொடிமரத்தடியில் பாடப்படும் பாடல்கள்

## கொடித்தம்பத் தருகில்

பன்:- தகித ராகம் இராகம் : உஜ்ஜனை

மடையில் வாளை பாயமாதரார்
குடையும் பொய்கை கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சும் கீழ்
உடையும் கொண்ட உருவமென் கொலோ

நீடும் புனற் கங்கையும் தங்க முடிமேல்
கூடும் மலை யாளொரு பாகம் அமர்ந்தார்
மாடும முழவம்மதி ரம்மட மாதர்
ஆடம் பதி அன்பிள வ்நதுறை யாரே

பண்:- காந்தாரபஞ்சமம் இராகம்:- அடானம்

சொற்றுனை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

மின்னிய செஞ்டை வெண்பிறையான் விரிநூபினன்
பன்னிய நாள்மறை பாடியாடி பருவூர்கள் போய்
அன்னம் அன்னந்நடை யாளொடு மமரும்மிடம்
புன்னைநன் மாமலர் பொன்னுதிர்க்கும் புனைவாயிலே

5ம் திருவிழா வாம்பக்தி முக்தி பாஙனோற்சவத்தில் பாடப்படும் பாடல்

## திருவாசகம்

# சிவபுராணம்



திருவாசகம்

தொல்லை இரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகங் கொடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்

சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகிய முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுன் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி

மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தான் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டளிக்க வல்லானே

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## 5ம் திருவிழாவாம் பக்திமுத்தி பாவனேற்சவத்தில் பாடப்படும் பாடல்

## திருக்குறுந்தொகை

1. பண்ணி னேர் மொழி யாளுமை பங்கரோ
பண்ணி னார் வாஞ் செய்மறைக் காடரோ
கண்ணினாலுமைக் காணக் கதவினைக்
திண்ணமாக திறந்தருள் செய்மினே

2. ஈண்டு செஞ்சடையாகத் ளீசவோ
மூண்ட கார்முகல் இன் முறிக் கண்டரோ
ஆண்டு கொண்ட நீரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கதவின் வலிந்க்குமே

3. அட்டமூர்த்தியதாகிய வப்பரோ
துட்டர் வன்புரல் சுட்டசுவண்டரோ
பட்டம் கட்டியப் சென்னிப் பரமரோ
சுட்ட விக்கதவற்திறப் பிம்மனே

4. அரிய நான்மறை யோதிய நாவரொ
பெரிய வான்புரல் சுட்டசுவண்டரோ
விரிகொள் கோவன வாடை விருந்தரோ
பெரிய வான்கதவந்துணை நீக்குமே பிரிக்கவே

5. மலையின்டிருக் கும்மறைக்காடரோ
கலைமகள்வந்திறைஞ்சுங்கழலோத்தரோ
விலையன் மாமணி வண்னவுருவரோ
தொலைவி வாக்கத வந்துணை நீக்குமே

6. பூக்கும் தாழை புறனர் கபருகெலாம்
ஆக்கும் தண்பொழில் சூழ்மறைக்காடரோ
ஆர்க்கும் காண்பரி ரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவை திறவமே

7. வெந்த வெண்பொடிப் பூசும் விகர்தரோ
அந்த மல்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந்திறைஞ்சிட
இந்த மாக்கதவம் பிணி நீக்குமே

8. ஆறு சூடு மணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குடிகரோ
ஏற்தேறிய வெம்பெரு மானிந்த
மாறிலாக்கதவம் லி நீக்குமே

9. சுன்ன வெண்பொடி பூசுஞ்சுவண்ட ரோ
புண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அன்னளாதி யணி மறைக் காடரோ
திண்ணமாக்கதவம் திறப் பிம்மனே

10. விண்ணு ளார் விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார் வணங்கும் மறைக்காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத்திறந்தருள் செய்யினை.

11. அரக்கனை விரவாலைந் திட்டநீர்
இரக்கமொன்றில் ரெம்பெருமானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறை காடரோ
சுரக்க விக்கதவற் திற்பிபம்மனே

6ம் திருவிழாவாம் இலிங்கோற்சவத்தில் பாடப்படும் பாடல்

## போற்றித் திருவகவல்

*மாணிக்கவாசகக் சுவாமிகள் தில்லையில் அருளிய*

*போற்றித் திருவகவல்*

சகத்தி னுற்பத்தி

(நிலைமண்டிலவாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடியாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
அடிமுடி யறியு மாதர வதனிற்
கடுமுர ணேன ஆகிமுன்கலந்
தேழ்தல் உருவ இடந்து பின்எய்த்த
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்க லுலகினில்
யானை முதலா எறும்பீ றாய
ஊன்மில் யோனியின்உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்
தீனமில் கிருமிச் செலுவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களி ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயோடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுக் டோறு மடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு எனப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருஙடகழய சாய னெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து னம்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
தீர்ககிடை போகா விளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்துங்
கல்வி யென்னும் பலகடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லவிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் மாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருத்து
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதலம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானா ரயலவர்கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்
சூற்ற மென்னுத் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சர்த மாகவே சாத்திரங் காட்டினர்
சமய ஊதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அஏற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் கழித்தடித் தாஅர்த்து
உலோகா யதனெனும் மொண்டிறற் பாம்பின்
கலாமே தத்த கடுவிட மெய்தி
அதித்பெரு மாயை யெனைப்பல குழவுந்
தப்பா மேதாம் பிடித்தது சரியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிதல் விடையறா அன்பிற்
பசுமரத் தாணி மறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைத் தனுகுல மாயமெய்விதிர்த்துச்

சமம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியு
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர வாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் நிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழவது போல
முன்பின் னாகிமுனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக்கேங்கி
அன்பெனு மாறு கரையது புரள்
நன்புல லொன்றி நாதலொன் நற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயர்வன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெட்க்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய்போற்றி
மூவர் நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா வென்றனக்கருளாய்போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையு மெந்தாய் போற்றி
ஈச போற்றி யிறைவ போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
அரசே போற்றி யமுதே போற்றி

விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையே னடியை கண்டாய் போற்றி
ஐயா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே பேர்றறி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய விறைவா போற்றி
மூவேழ் கற்ற முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியேன் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த வொருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி
அருமையி லெளிய ஆழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆ்னந்த வாரி போற்றி
அழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானோர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்நதாய் பேர்றறி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி

கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேந் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக்கங்கை தரித்தாய் போற்றி
ஆரு ரமர்ந்த வரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் பொற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளு அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவாக்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டு அம்மான் போற்றி
இருள்கெட வருளு மிறைவா போற்றி
தளர்ந்தே நடியென் றமியேன்போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அந்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தாபோற்றி பலனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தே நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமு மானாய்போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளானவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி யறுகின் றாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவனே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருக்குரு விக்கு அன்று அருளினை போற்றி
இரும்புலன் புலர விசைந்தனை போற்றி
படியுறுப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்
பரகதி பாண்டியங் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவளர் மையல் துணிப்பாய் போற்றி

பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசோன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சமசம போற்றி 225

## 6ம் திருவிழாவாம் இலிங்கோற்சவத்தில் பாடப்படும் பாடல்

## போற்றித் திருத்தாண்டகம்

திருக்கயிலாயம் அருச்சனை போற்றித்திருத்தாண்டகம்
திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீனாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (423)

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியேன் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (424)

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி

திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (425)

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குத் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (426)

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (417)
சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (428)

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புதைணனாய் நின்றாய் போற்றி
சுமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (430)

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேுவர்தொழுத் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் தலிய அலந்தேுன் போற்றி
காலாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (431)

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிவா என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (482)

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக் கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகபந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (433)
திருக்கயிலாயம் போற்றித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்கா தென் னுள்ளத்திருந்தாய் போற்றி

காறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவபாய் போற்றி
எறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (434)

முன்பாகி நின்ற முதலே போற்றிஸ
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (435)

மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அளயார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (436)

உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரின் திகழ்கின்ற சோதீ போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய் முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (437)

மைசேர்ந்த கண்ட மிடற்றாய் போற்றி
பாலுக்கும் ஓராழி யீந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ றாடீ போற்றி

மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசே ரனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (438)

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அளடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேலு மேனி யுடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போ்றறி
கூறேறு மங்கை மழுலா போற்றி
கொள்ளுங் கிழமைமே ய மூனாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (439)

அண்டமே மூன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பாரோாவின் ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடந்தாய் போற்றி
தொழில்நோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (440)

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேராநோய் பேரவிப்பாய் போற்றி
உருவிநினை வார்தம் முள்ளாய் போற்றி
ஏனத் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (441)

செய்யமலர் மேலான் கண்ணன் போற்றி
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னனையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி

மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்ததோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (442)

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றி
சீலையெடுக்க வாயலற வைத்தாய; போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (443)

திருச்சிற்ம்பலம்

திருக்கயிலாயம் போற்றித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை யறியாமை நின்றாய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமொதிய நக்காய் போற்றி
காட்டாளை மெய்ந்தோ துரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (444)

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீட் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர்மெய் பூசுந் தலைவா போற்றி
எதிரா வுலகம் அமைப்பாய் போற்றி
என்றும்மீ ளாவருள் செய்வாள் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (445)

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வ முடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாய வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அளயார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிது முடையாய் போ்றறி
மன்னியென் சிந்தை மகிழந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
சூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
ஏழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்'கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்றும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
ஏகமா முண்டி யுடையாய் போற்றி
அரியா யமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

என்மேலும் எண்ண முடையாய் போற்றி
ஏறறிய வேறுங் குணத்தாய் போற்றி
ண்மேலே பாலித் திருந்தாய் போற்றி
பண்ணெடி யாழ்வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிாந்தாய் போற்றி
மேலார்கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொன் றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (450)

முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தி போற்றி
துடியா ரிடையுமையாள் கங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (451)

* * *

போற்றிசைத்துன் அடிபர நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியர் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையோனே போற்றி போற்றி. (452)

இறைவன் :- பரமசிவன் இறைவி:- பார்வதியம்மை
திருக்கன்றாப்பூர் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைதத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. (453).

மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட

## திருப்பொற்சுண்ணம்

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுவகிர் அன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புற(ம்) நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தார் கோன் அயன் தன்பெருமான்

ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எந்தர மாளுமை யாள் கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ண மிடித்து நாமே

காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே

அறுகெடுப் பார் அயனும்மரியும்
அன்றி மற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்கு
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்து நாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப

பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பாராபரனுக்கு
ஆடக மாமலை யன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைத்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு வென்னும் உலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற் சுண்ண மிடித்து நாமே

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டின மாடஆடச்
சித்தஞ் சிவனொடு மாடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடு மாடஆடப்
பிறவி பிறரொடு மாடஆடப்
அத்தன் கருணையொடு ஆடஆட
ஆடப் பொற் சுண்ண மிடித்து நாமே

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப் பொற் சுண்ண மிடித்து நாமே

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்மைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பொரு மான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித் ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்

பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவக மேந்திப் வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரும் உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டடல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி

இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்து நாமே

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்குத்
துன்பமு மாயின்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்விடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே

திருச்சிற்றம்பலம்

## 11ம் திருவிழாவாம் தீர்த்தத் திருவிழா அன்று பாடப்படும் பாடல்

### *திருவூஞ்சல் திருப்பதிகம்*

திருவருசெந் தமிழ்மணமார் யாழ்ப்பா ணத்தில்
திகழ்பதியாம் கெந்குவிலில் மேற்கே யாகத்
தருபெயரா மெனுங்கள்ளிக் கொக்க ணாங்கே
தங்கியருள் பொழிந்தருளும் தெய்வ மாக
வருமரிய சிறீவராகி அம்பாள் மீது
வாஞ்சையுடன் ஊஞ்சலிதைப் பாட மேலாம்
கருதுமறைச் சிரக்களிறே கண்ணே யென்றன்
கற்பகமே நின்பதப்பூக் காப்ப தாமே.

### *நூல்*

பாரோங்கு செம்பவளம் கால்க ளாகப்
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
ஏரோங்கு வெண்டரளம் கயிற தாக
ஏற்றமிகும் மாணிக்கம் பலகை யாகப்
பேரோங்கு மூஞ்சலின்மேல் பெரிதே விற்றுப்
பெருமைதரும் கலைதிருவும் வடந்தொட் டாட்டர்
சீரோங்கு கொக்குவில்மேற் கதனில் வாழும்
ஸ்ரீறிவராகி அம்பிகையே ஆடி ரூஞ்சல்

உள்ளுவகை மலரயன்மால் கரங்கள் கூப்ப
உற்றமணி யோசையட்டபாலர் காப்பக்
கொள்ளுமையை யோர்தூப தீபங் காட்டக்
கூடுகண நாதரெலாம் மாலை சூட்ட
அள்ளுபுகழ் கலைஞானம் எண்ணெட் டென்றும்
ஆமுளத்தில் தங்கிடவே அழ்ந்த ஞானம்
தெள்ளுதமிழ் தங்கிடநற் கொக்கு விற்கண்
ஸ்ரீறிவராகி அம்பிகையே ஆடீ ரூஞ்சல்

தங்குகொம்பு முரசுதுடி தாள மோங்கத்
தக்ககுடை யாலவட்டம் தாழ மோங்க
அங்குளநா ரதர்வேத கீதம் பாட
அருள்தொண்ட ரவம்மகிழந்தே வாழ்வு கூட
இங்குநறை மலர்மாரி இன்பாய்ப் பெய்ய
இலங்குமுனி பன்னியர்கள் ஏந்தி யுய்யத்
தெங்குநிரை கொக்குவிற்பாற் கள்ளிக் கொக்கின்
சிறிவராகி அம்பிகையே ஆக ரூஞ்சல்

தூவிநடை யயிராணி கவிகை தாங்கத்
துலங்குவிழி யரம்பையர்க ளாசி யேந்த
மேவியழ குருவசிவெண் கவரி வீச
மேன்மையுள் கார்த்திகைப்பெண் கவிதை யேரப்பக்
கூவியிட முனமாக வெளிலை பாக்குக்
கொண்டுவரும் மேனகையும் நடன மாடத்
தேவியெனக் கொக்குவில்மேற் கதனில் வாழும்
சிறிவராகி அம்பிகையே ஆடீ ரூஞ்சல்

சாலவொளி வயிரமணிச் சுட்டி யாடச்
சாருமெழில் மாணிக்கத் தோடு மாடக்
கோலமிகு முத்தாரம் மதாணி யாடக்
கூறுவளைத் தொடியுடனங் கதமு மாட
ஞானமிசைப் பாதசரந் தாழ மாட
ஞாயிறுபோல் சிலம்பும்பா டகமு மாடச்
சீலமிகு கொக்குவில்மேற் கதனில் வாழும்
சிறீவராகி அம்பிகையே ஆடீ ரூஞ்சல்

தங்குசிவன் அந்நாளில் வராசு மாகித்
தாய்போன்று பாலீந்தான் குட்டிக் காகப்
பொங்குசகோ தரன்திருமால் வராக ரூபம்
புவியிலரன் அடிகாணப் யோருந்திப் போனான்
இங்கெமக்கே யருளியப் பெண்பா லாக
ஏற்றதிரு நாமமதே வராகி யாகச்
செங்கரமோ ராறுடனே திகழ வந்த
சிறீவராகி அம்பிகையே ஆடீ ரூஞ்சல்

வந்தித்த் உலக்கைகரம் வலம்மே லாக
வடிவாக நடுக்கரத்தில் வாளு மாகப்
பந்தித்த வரதமதை வலங்கீ ழாக்கிப்
பார்த்தருள இடக்கரம்மேல் இரத்தம் தாங்க
உந்திக்கப் பாத்திரங்கே டயமும் கொண்டு
உலகாள அக்கரம்கீட் அபயம் காட்டிச்
சிந்திக்கக் கொக்குவிற்கண் பச்சை மேனிச்
சிறீவராகி அம்பிகையே ஆடீ ருஞ்சல்

வந்தவுயர் "பிராம்மி" யேநீர் ஆடீர் ஊஞ்சல்
வளர்திரு "மா கேஸ்வரி"யே ஆடீர் ஊஞ்சல்
சந்ததமும் "கௌமாரி" ஆடீர் ஊஞ்சல்
தரணிபுகழ் "வைஸ்ணவி"யே ஆடீர் ஊஞ்சல்
எந்தமையாள் "சாமுண்டி" ஆடீர் ஊஞ்சல்
ஏற்ற "சண்டி காதேவி" ஆடீர் ஊஞ்சல்
சிந்திக்கச் "ஸப்தகன்னி" கொக்கூர் மேற்கில்
சிறீ "வராகி" அம்பிகையே ஆடீ ருஞ்சல்

தாய்நாட்டில் மலையாள் தேசந் தன்னில்
தனிக்கோவில் உண்டென்பர் மூர்த்தங் கேட்கில்
போய்ப்பாரும் தெரியாதென புகலு வார்கள்
புகழ்வராகி மாலையிலும் புரியக் காணோம்
தோய்பெருமை கேட்டதனாற் தொடர்ந்தா ராய்ந்தே
சொல்லுமுன் தானவுருத் தோற்றங் கண்டார்
சேய்புகழார் கொக்குவில்மேற் கூரில் வாழும்
சிறிவராகி அம்பிகையே ஆடீ ருஞ்சல்

விக்கினவி நாயகனே விமலா போற்றி
வேலவனே திருமுருகா விறலோய் போற்றி
தக்கதிரு நவநீதத் திருடர் போற்றி
காற்றும்மீ னாட்சியுமைத் தலைவி போற்றி
செக்கநிற வடுகனெனும் திறலோய் போற்றி
திறமருள்சண் டிகாதேவித் திலகோய் போற்றி
திக்கதெலாம் போற்றிசய வெண்றே போற்றச்
சிறீவராகி அம்பிகையே ஆடீ ருஞ்சல்

## *வாழி*

ஆவாழி அந்தணரோ டறிஞர் வாழி
அருளுதவு சிவாகமங்கள் அனைத்தும் வாழி
பூவாழி வான்வாழி புனிதர் வாழி
போற்றுதிரு முறைவாழி பொலிந்து வாழி
காவாழி யருள்வாழி கருணை வாழி
கற்புமிகு பெண்ணாண்கள் களித்து வாழி
தேவாழி கொக்குவிலூர் சிறந்து வாழி
சிறீவராகி யம்பிகையே வாழி! வாழி!

## *ஏச்சரீக்கை*

அருளுத விடவெனக் கொக்குவில் மேற்குள் அன்னாய் எச்ச ரீக்கை
தெருளுத விடமனந் தக்கது ஆற்றிடுந் தேவீ எச்ச ரீக்கை
மருளது கெடுத்தித யத்தமர் நாயகி மாதே எச்ச ரீக்கை
திருவளர்ந் திலங்கிடச் செய்யுவ ராகியென் சீலீ எச்ச ரீக்கை

## *பராக்கு*

சீருந்து ஸப்தகன்னி யாளே பராக்கு
சிறப்புமிக அருளுதவும் செவ்வி பராக்கு
பாருந்து மூவிருகைப் பாவாய் பராக்கு
பணியாதார் தமைக்கடியும் பண்பீ பராக்கு
ஏருந்து வாளுலக்கை ஏற்றாய் பராக்கு
எமையாள வந்தவளே இன்பே பராக்கு
பேருந்து கொக்குவிலூர்ப் பெண்ணே பராக்கு
பெருமைசிறீ "வாராஹி"ப் பேறே பராக்கு

## *லாலி*

ஆறுகரங் கொண்டவளே லாலிசுப லாலி
ஆம் "காரா வாகனத்தி லாலிசுப லாலி
கூறுமுகம் "வராகமது லாலிசுப லாலி

கொள்ளபய வரம்மாறும் லாலிசுப லாலி
ஏறுபுகழ்ச் சிவசக்தி லாலிசுப லாலி
என்றுமடி யார்க்கருள்வோய் லாலிசுப லாலி
வீறுபுகழ்க் கொக்குவிலூர் லாலிசுப லாலி
விளங்குமன்னை சிறீவராகி லாலிசுப லாலி
"காரா வாகனத்தில எருமை வாகனமுள்ளவள்) "வராகமது பன்றி வடிவு.

*மங்களம்*

மங்களம் ஜெய மங்களம் - மங்களம் சுப மங்களம்
திருவளர்க்கும் செந்தமிழ்க்கு ஜெய மங்களம் இங்கு
சிவசமய மோங்கிடவே சுப மங்களம்
சீர்கணப திக்குமருட் சிவைசிவனார் குமர னுக்கும்
பேர்திருமால் வைர வர்க்கும் பெண்சண்டி கேள்வரிக்கும்
ஏப்பரவ வாராஹி ஏற்றதிரு வூஞ்சலுக்கும்
பார்புகழ்க் கொக்குவிலூர் பாங்குபெற மங்களம்
மங்களம் ஜெய மங்களம் மங்களம் சுப மங்களம்.

உ
சிவமயம்

# கோளறு திருப்பதிகம்
## பண் – பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தஅதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றோடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கண் முடிமேல ணிந்தெ

ஹுளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி சயமாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல வகைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல ணிந்தெ
ஹுளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுண நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டனெந்தை மடவாளோடு
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தெ
ஹுளமே புகுந்த வதனால்
வெஞ்சின லவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வாள்வரி யதளதாடை வரிகோவ ணத்தர்
மடவா டனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
ஹுளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்பின முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவா டனோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கட நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேற மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

கொத்தலர் குழலியோடு விசையற்கு நலகு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ண
றிருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ றுன்னி
வளர்செம் பொனெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள் வராணை நமதே.

மந்திரம்

ஓம் திரயம்பகம் பஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்தனம்
உர்வாருகமின் பந்தகுத்
ம்குத்யோர் முகஷியமாய்ருதாத்

சுத்த சத்துவருணம் பொருந்தியவரும் ஆன்ம ஒளியை வளர்ப்பவருமாகியமுக்கண்ணனைத் தியானிப்போமாமாக.

காம்பிலிருநது வெள்ளரிப்பழம் தானே விடுபடுவது போல், பிறப்பு இறப்பு என்ற சத்திலிருந்து உமதுரலனால் விடுபடுவோமாக பேரின்பப் பாதையலிருந்து விலகாதிருப்போமாக.

# சகலகலாவல்லி மாலை



சரஸ்வதியந்தாதி

காப்பு

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணாவமிக்கு மென்னம்மை தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்- துடியிடையும்
அல்லும் பகலு மனவரத் முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்

பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற் கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலா வல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்

விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமுமவ தானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போற்

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

முன்னின்று செய்யுள் முறையாய் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

### வேண்டுதற் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பபெடுததே வாழ்ந்திடுவே
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அளிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீநோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்

காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப்புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பலுறும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல் வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூ மணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்துஅணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்

சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூ வும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லக் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லாம் ஏற்றிளமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

# கௌரி விரத காலத்தில் பாடப்படும் பாடல்



## வராகி புகழ் மாலை

### வராகி துணை

தீங்கு எதுவும் எம்மைத் தீண்டாமல் காப்பவளே!
வீங்கு புகழ் மிக்கவளே! விண்ணவியே எம்வராகி
வல்லமை பல அளித்து பெருவாழ்வு தருவதனால்
நல் வணக்கம் தந்தோம்நனி

1. அண்டம் காக்கும் ஈஸ்வரியே அன்னை வராகி
   அன்புடனே காத்தருள்வாய் தாயே வராகி
2. ஆனந்த சொரூபியே அன்னை வராகி
   ஆட்கொண்டு எமை காத்திடம்மா தாயே வராகி
3. இனிய உள்ளம் கொண்டவளே அன்னை வராகி
   இரங்கி எம்மைப் பார்த்திடம்மா தாயே வராகி
4. ஈரமனம் படைத்தவளே அன்னை வராகி
   ஈர்ப்புடன் இரங்கிடம்மா தாயே வராகி
5. உலகம் புகழ் உத்தமியே அன்னை வராகி
   உவகையுடன் எமக்கருள்வாய் தாயே வராகி
6. ஊரார் உருகித் துதிப்பவளே அன்னை வராகி
   ஊக்கமுடன் அருள்புரிவாய் தாயே வராகி
7. எந்த வினையும் அறுப்பவளே அன்னை வராகி
   எமக்கு என்றும் துணைபுரிவாய் தாயே வராகி
8. ஏகாந்த நாயகியே அன்னை வராகி
   ஏங்கும் எமக்கு இரங்கிடம்மா தாயே வராகி
9. ஐயமற்ற நெஞ்சுடையாய் அன்னை வராகி
   ஐயமில்லா வாழ்வளிப்பாய் தாயே வராகி
10. ஒப்பற்ற குணமுடையாய் அன்னை வராகி
    ஒழுக்கநெறி எமக்கருள்வாய் தாயே வராகி
11. ஓங்காரமாய் விளங்கும் அன்னை வராகி
    ஓங்கு புகழ் தந்திடம்மா தாயே வராகி
12. கண்கண்ட தெய்வம் அம்மா அன்னை வராகி
    கடைக்கண் பார்வை அளந்திடம்மா தாயே வராகி
13. காருண்ய நாயகியே அன்னை வராகி
    காட்சி எமக்களித்திடம்மா தாயே வராகி.

14. சந்தோஷம் அளிப்பவளே அன்னை வராகி
சந்தோஷம் எமக்கருள்வாய் தாயே வராகி
15. சாந்த குணம் படைத்தவளே அன்னை வராகி
சாந்திநிலை அருள்புரிவாய் தாயே வராகி
16. சிம்மவாகன சிங்காரியே அன்னை வராகி
சிரித்த முகம் காட்டிடம்மா தாயே வராகி
17. தரணிஆழ் தயாபரியே அன்னை வராகி
தர்மம்காக்கும் வழிஅருள்வாய் தாயே வராகி
18. தாய்ப்பாசம் கொண்டவளே அன்னை வராகி
தாயுருவில் வந்திடம்மா தாயே வராகி
19. தித்திக்கும் தேனமுதே அன்னை வராகி
திடசித்தம் அளித்திடம்மா தாயே வராகி
20 துஷ்டர்களை அழப்பவளே அன்னை வராகி
துன்பம் எல்லாம் சிதைத்திடம்மா தாயே வராகி
21. மகிமைத் தோற்றம் உடையவளே அன்னை வராகி
மகிழ்ந்துனைத் துதித்தருள்வாய் தாயே வராகி
22. மாசற்ற மனத்தாளே அன்னை வராகி
மாந்தர் குறை போக்கிடம்மா தாயே வராகி
23. பண்புள்ளம் படைத்தவளே அன்னை வராகி
பரிந்துஎமக்கு அருள்தாருமம்மா தாயே வராகி
24. பார் காக்கும் பத்தினியே அன்னை வராகி
பாவியெனக் கிரங்கிடம்மா தாயே வராகி
25. வஞ்சகரை ஒழிப்பவளே அன்னை வராகி
வரம்தந்து காத்திடம்மா தாயே வராகி.

**சொல்லச் சொல்ல தித்திக்கும் வராஹி எனும் நாமரசம்**
**எல்லையில்லா இன்பம் தந்து எங்கும் தானாய் நிற்கும் ரசம்**
**வல்வினை அழிந்துவிடும் வஞ்சனை ஒழிந்துவிடும்**
**நல்லதையே நாடவைக்கும்நாமென்ப தொழிய வைக்கும்**
**சொல்லச் சொல்ல தித்திக்குமே வராஹி எனும் நாமரசம்**

**சுபம்**

**சு. நல்லையா**
**"வெண்மதி"**
**ஆனைக்கோட்டை**

## 1) கற்பூர நாயகி தோத்திரம்

கற்பூர நாயகியே கனவல்லி காரி மகமாயி கருமாரி-யம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா- பூவிருந்த வள்ளி தெய்வயானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி விழிக்கோலமாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே சுடராக
வாழவைப்பாய் என்னை நீயே அம்மா ( கற்பூர)

1. புவனமுழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புறமெரித்தேன் புறமிருக்கும் பரமேஸ்வரி
தவநலமாய் வடிவெடுக்கும் மமேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி- அம்மா
கவலைகளை தீர்த்துவிடும் காளிஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதிஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி - அம்மா (கற்பூர)

2. உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறைபடுவேன் தாயே- எந்தன்
அன்னையவள் நீயிருக்க உருகும் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையே அம்மா - அம்மா

3. கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா
காத்திருக்க வைத்திருத்தல் முறையோ அம்மா
சின்னவளின் குரல்கேட்டுன் முகம் திருப்பு
சீரித்தடி என்னைத் தினம் வழியனுப்பு அம்மா ( கற்பூர)

3. கண்ணிரண்டும உன் உருவைக் காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியை நாடவேண்டும்
பண்ணமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கையிரண்டும் கூட வேண்டும் - அம்மா
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆக வேண்டும்
இருப்ப தெல்லாம் உன்னுடையதாக வேண்டும்.
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகளுடைய குறைகளையும் தீருமம்மா- அம்மா (கற்பூர)

4. நெஞ்சினில் உன் குங்குமமே நிறைய வேண்டும்
நெலிசினில் உன் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருக வேண்டும்- பாடும்

கவிதையிலே உன் நாமம் வாழவேண்டும்- அம்மா
சுற்றமெல்லாம் நீடுழி வாழவேண்டும் - அந்த
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்கு சொல்லலாமா
மடிமீதில் பிள்ளை தன்னை தள்ளலாமா-அம்மா (கற்பூர)

5. அன்னைக்கே உபசாரம் செய்வதுண்டோ
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமையன்றி காவலுண்டோ
கன்றுக்கு பசுவின்றி சொந்தமுமுண்டோ- அம்மா
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீயெந்தன் அன்னையன்றோ
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ அம்மா (கற்பூர)

6. அன்புக்கே நான் அடிமையாக வேண்டும்
அறிவுக்கே என் காது கேட்க வேண்டும்- ஒரு
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்க வேண்டும்- அம்மா
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே தான் என்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீ என்றும் வாழவேண்டும்- அம்மா(கற்பூர)

7. கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை- உன்னை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியிலலை நடந்துடவோ
காலிரண்டால் ஆகவில்லை செம்பவளவாயழகி உன்நெறிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பாளவு விழியாலே உன்னை என்றும் அடிபணியும் ஆசைக்கோர்
அளவுமில்லை - அம்மா( கற்பூர)

8. காற்றாகி கனலாகி கடலாகினாய்
கயிராகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளையாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய் - அம்மா
தோற்றறாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடும் புகளோடும் வைப்பாய் என்னை

## ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்காதேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்காதேவி சரணம்
துர்க்கை அம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்
தருமம் காக்கும் தாயும் அவளை தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும் , சர்வ மங்களம் கூடும்
(ஜெய ஜெய)

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மைச் சுற்றிவரும் பகைவிரட்டும்

நெறியிலே குங்குமப் பொட்டு வெற்றிப்பாதையை காட்டும்

ஆயிரம் கரங்கள் உடையவளே- ஆதிசக்தியவள் பெரியவளே

ஆயிரம் நாமங்கள் கொண்டவளே-தாய் போல் நம்மை காப்பவளே
(ஜெய ஜெய)

சங்கு சக்கரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலுடன் சூழமும்

தங்கக் கைகளில் தாங்கி நிற்பாள் அம்மா! சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்

திங்களை முடிமேல் சூடி நின்றால் மங்கள வாழ்வும் தந்திடுவாள்

மங்கையற்கரசியும் அவளே மங்கயற்கண்ணியும் அவளே!

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்காதேவி சரணம்

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்காதேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்

## 3) வருவாய் வருவாய் மீனாட்சி

1. வருவாய் வருவாய் மீனாட்சி
   வந்தருள் புரிவாய் மீனாட்சி
   பெரியார் நகரில் மீனாட்சி
   பெருமை வாய்ந்த மீனாட்சி
2. அனுதினம் வருவோம் மீனாட்சி
   அனுக்ரஹம் தருவாய் மீனாட்சி
   ஞானாம்பிகையே மீனாட்சி
   ஞானம் தருவாய் மீனாட்சி
3. பர்வத புத்ரியே மீனாட்சி
   பலமருள் தருவாய் மீனாட்சி
   மனோன்மணி தாயே மீனாட்சி
   மாங்கல்யம் தருவாய் மீனாட்சி
4. திரிபுர சுந்தரியே மீனாட்சி
   திருவடி நாடினோம் மீனாட்சி
   பாஜ பவானி மீனாட்சி
   யலமருள் தருவாய் மீனாட்சி

5. சுக்ர நிவாஸினி மீனாட்சி
சங்கடம் தீர்ப்பாய் மீனாட்சி
சுமேருவாஜினி மீனாட்சி
சுபம் அருள் தருவாய் மீனாட்சி

6. ஜெய ஜெய ஜெய ஜெய மீனாட்சி
ஜெய ஜெய ஜெய ஜெய மீனாட்சி
ஜெய ஜெய ஜெய ஜெய மீனாட்சி
ஜெய ஜெய மங்கள மீனாட்சி

## 4) குங்குமத்தை சுமந்திருக்கும் தாயே

குங்குமத்தை சுமந்திருக்கும் தாயே - எங்கள்
குறைகளெல்லாம் தீர்க்க வருவாயே!
மஞ்சளையும் சுமந்திருக்கும் தாயே -இங்கு
மங்களமாய் வந்திருப்பாய் நீயே
நெய் விளக்கை ஏற்றிவைத்தேன் - தாயே - நித்தம்
எமைக் காத்திடுவாய் நீயே
கைவிளக்காய் துணையிருப்பாய் தாயே- எங்கள்
கவலையெல்லாம் தீர்த்திடுவாய் நீயே!
படிவிளக்கு ஏற்றி வைத்தேன் தாயே - அதன்
பலனையெல்லாம் எனக்களிப்பாய் நியே
அலங்காரம் செய்துவிட்டேன் தாயே- உந்தன்
அன்பை மட்டும் எனக்களிப்பாய் நீயே
பூமாலைகளை சூட்டிவிட்டேன்- தாயே- உந்தன்
மனமிரங்கி காத்திடுவாய் நீயே
தூபதீபம் ஏற்றி வைத்தேன்தாயே- எங்கள்
துன்பமெல்லாம் நீக்கிடுவாய் நீயே!
பால்பழங்கள் வைத்து விட்டேன்தாயே- அதன்
பலனைமட்டும் எனக்களிப்பாய் நீயே
கற்பூரம் ஏற்றிவைத்தேன் தாயே- உந்தன்
கருணையுள்ளம் இரங்கிடுவாய் நீயே
தேடிதேடித் அலைந்திருந்தேன் தாயே- உந்தன்
திருவுள்ளம் இரங்கிடுவாய் நீயே
பாடி அழுது ஏங்குகின்றேன் தாயே- இந்த
பாவைமுகம் பார்த்திடுவாய் நீயே- இந்த
பக்தர் உள்ளம் காத்திடுவாய் நீயே

ஆரத்தி ஏற்றுக் கொள்ளம்மா- கற்பூரதீப
ஆரத்தி ஏற்றுக் கொள்ளம்மா ஸ்ரீ மங்களதீப
ஆரத்தி ஏற்றுக் கொள்ளம்மா!
அபிஷேகம் செய்துனக்கு பட்டாடை சாற்றிப்பொன்
ஆபரணம் பூமாலை அழகுடன் அலங்கரித்தோம் (ஆரத்தி)
பொங்கல் புளி அன்னமும் சுண்டல் வடை பாயசமும்
தேங்காய் பழம் தாம்பூலம் சகலமும் படைத்தோம் (ஆரத்தி)

சந்தனம் ஐவ்வாது கஸ்தூரி புகை மணக்க
மங்கள வாத்தியங்கள் மாண்புறவே முழங்க (ஆரத்தி)
மங்கையர் குறைகள் தீர மஞ்சள் தரும் நாயகியே
எங்கள் குறை தீர குறம் எடுத்துரைக்கும் மாதா ( ஆர்த்தி)
சங்கரி கருமாரி வேற்கண்ணி என்றுன்னை

சந்தமுடன் பாடி வணங்கி ஏற்றும் கற்பூர (ஆரத்தி)
பக்தியுடன் உன்னை சரணமடைந்துவிட்டால்
எத்தினமும் கதி நீயே எங்களைப் பாரும்அம்மா ( ஆரத்தி)
ஓம்காரி வைஷ்ணவி மாதங்கி ஸ்ரீபாலா
ஹரிம்காரி ஸ்ரீதுர்க்கே சரணம்பராசக்தி (ஆரத்தி)
மீனாட்சியம்மா (ஆரத்தி)

## லிங்காஸ்டகம்

1. பிரம்ம முராரி ஸீரார்ச்சித லிங்கம்
   நிர்மல பாஷித சோட்தலிங்கம்
   ஜன்ம துர்க் விநாசக லிங்கம்
   தத் ப்ரணமாம் சதாசிவ லிங்கம்

2. தேவமுனி பரவரச்சித லிங்கம்
   காமதஹம் கருணாகரலிங்கம்
   ராவணதர்ப்ப விநாசனலிங்கம்
   தத் ப்ரணமாம் சதாசிவ லிங்கம்

3. ஸர்வஸிகந்த ஸுவேட்த லிங்கம்
   புத்த: விவர்த்தன காரணலிங்கம்
   ஸித்த ஸுராஸுர வத்தித லிங்கம்
   தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்
4. கனக மஸாமணி பூஷிதலிங்கம்
   பணிபரி வேஷ்எத சோபிதலிங்கம்
   தகஷஸீயக்ஞ விநாசனலிங்கம்
   தத்ப்ரணமாம் ஸதாசிவலிங்கம்

5. குங்கும சந்தன லேபிதலிங்கம்
பங்கய ஹாரஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாயவிநாசக லிங்கம்
தத் ப்ரணமாம் ஸதாசிவலிங்கம்

6. தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பானவர் பக்தி ப்ரேவசலிங்கம்
தினகர கோடி பிரபாகரலிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவலிங்கம்

7. அஸ்டதளோபரி வேஸ்டிகலிங்கம்
ஸர்வஸமுத்பவ காரணலிங்கம்
அஷ்ட தரித்திர விறாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

8. ஸுரகம ஸுரவர பூஜிகலிகம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராதபரம் பரமாத்மகலிங்கம்
தத் பிரணமாமி ஸதாசிவலிங்கம்

## சிவன் நாமவளி

1. நந்திகேஸ்வரா நாகபூஷணா
நடனஈஸ்வரா தில்லை நாயகா
விஷ்னுமித்ரா இஷ்டநாயகா
அம்பிகைப்பிரியா அனாதரகஷகா!

2. பசுபதிநாதா பார்வதிப்பிரியா
பூதவாஷனா புஸ்பலோசனா
விரிஞ்சி நாதனே ப்ரபஞ்ச நாயகா
அம்பிகைப்பிரியா அனாத ரஹகஷகா!

3. கோமகிப்பிரியா கௌரிசங்கரா
கயிலை நாதனே கந்தன்தந்தையே
சிவபெருமானே சிவகாமிநாதனே
அம்பிகைப்பிரியா அனாதரகஷகா!

4. ஜெகத் ரட்ஷகா ஆதிதேவனே
ஜெகதீஸ்வரா ஆத்மநாதனே
வேதமூர்த்தயே கந்தன் தந்தையே
அம்பிகைப்பிரியா அனாதப்ரட்ஷகா!

5. ஸகல நாயகா சந்தர சூடனே
புகலிடம் தந்தே கருணைகாட்டுவாய்
கங்காநாதனே வாமதேவனே
அம்பிகைப்பிரியா அனாதரட்ஷகா!

6. ருத்ர நாயகா காயத்ரி வல்லபா
லோக ராட்ஷகா நீலகண்டனே
விஸ்வநாதனே லிங்கமூர்த்தியே
அம்பிகைப்பிரியா அனாதரகஷகா!

## ஓம் சதாசிவா ஓம் நாரயணா.

ஓம் ஹர ஓம் சதாசிவா
ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா

1. கௌரி சமேத சதாசிவா
லஷ்மி சமேத நாராயணா

2. கைலாச பதே சதாசிவா
வைகுண்ட பதே நாராயணா

3. பாம்பை அணிந்தவா சதாசிவா
பாற்கடல் சயனா நாராயணா

4. நஞ்சை உண்டவா சதாசிவா
வெண்ணை உண்டவா நாராயணா

5. விபூதி அணிந்தவா சதாசிவா
கோபி அனர்ந்தவா நாராயணா

6. திரிசூலதாரி சதாசிவா
சங்கு சக்ரதாரி நாராயனா

7. ரிஷபவாகனா சதாசிவா
கெருடவாகனா நாராயணா

8. அபிஷேகப்ரியா சதாசிவா
அலங்காரப்பிரியா நாராயணா

9. வேத நாயகன் சதாசிவா
கீதை நாயகன் நாராயணா

10. பம்பம் பம்பம் சதாசிவா
ஓம் ஓம் ஓம் ஓம் நாராயணா
பம்பம் பம்பம் சதாசிவா
ஓம் ஓம் ஓம் ஓம் நாராயணா

## மாங்கல்ய பிச்சை போடம்மா

1. சதுர்முகன் தேவியரே சரஸ்வதி தாயே
சந்தமும் எந்தனோட நாவில் இரம்மா
பரிபூரண பலசாட்சரி பார்வதி தாயே
ஸ்திரமான மாங்கல்ய பிச்சை போடம்மா

2. கொத்தளங்கள் கொவ்விளநீர் கொங்கை உள்ளவளே
கோவில் வாழும் கைலாச நாதன் நாயகி
மத்தாங்கள் மொழியாளே வாவென்றழைக்க - என்
மடிமேல் மாங்கல்ய பிச்சை போடம்மா

3. அமலசடை மேல் விளங்கும் அலங்காரத்தாயே
அஞ்சுதலை நாகம்தன்னை ஆளும் தேவியே
மாதாவே தாயாரே பார்வதி தாயே
மண்ணில் வாழும் மகாதேவன் நாதநாயகி- என்றுமே

4. ஆதாரம் நீமொழிய எனக்கு வேறில்லை
மாதாவே மாங்கல்ய பிச்சைபோடம்மா
பொன்னான நாயகியே பார்வதிதாயே
எண்ணாமலைகள் தோறும் நீவளர்ந்தாயே

5. கண்ணாரக் காட்சி தந்து ஆசை தீர்ப்பாயே
எனைக் காவல் கொள்ளும் மணவாளனின் கைபிரியாமல்
அக்னியின் முன்பாக வலக்கை பிடித்த- என்
அன்பான கணவருக்கு பிந்திடாமலே

6. சிக்க நாச்சி பொன்னருளும் செல்வமும் வேணும்
ஜெகதீஸ்வரியே மாங்கல்ய பிச்சை போடம்மா
வந்தவினை போக்கி நல்ல வாழ்வையும் தந்து
என் மனஸ்தாபம் தீருமம்மா நீ இரங்கியே

7. ஏழைக்கு இரங்குமம்மா எந்தன் மாதாவே
எந்தன் மேலே கிருபை வேணும் பார்வதி தாயே
வாதவினை போக்கி நல்ல வாழ்வையும் தந்து
மற்றுமுள்ள சத்ருக்கள் வந்தண்டாமலே

8) புத்திரனையும் பாக்யத்தையும் தந்தருளம்மா
என்றும் பிரியாத மாங்கல்ய பிச்சை போடம்மா
ஒத்திசைத்த கணவரையும் தந்தருளும்மா
என்றும் அழியாத மாங்கல்ய பிச்சை போடம்மா

9) ஒத்த கூடப்பிறப்பையெல்லாம்தந்தருளம்மா
என்றும் உயர்வான மாங்கல்ய பிச்சை போடம்மா
வாழ்வும் உண்டாம் சோர்வும் உண்டாம் - மஞ்சாடும் உண்டாம்
மாதாவே உந்தனிடம் பக்தியும் உண்டாம்.

10) எந்தனோட குறைகளெல்லாம் தீர்த்ருளம்மா
ஜெகதீஸ்வரியே மாங்கல்ய பிச்சை போடம்மா
பரமேஸ்வரியே மாங்கல்ய பிச்சை போடம்மா

## மலர்கள் யாவும் கொண்டு வந்தே

1. ரோஜாப்பூ கொண்டு வந்தே- எங்கள்
ராஜேஸ்வரியை பூஜை செய்தால்
தேசாதி தேசம் மெச்ச ஒரு
ராஜா போல வாழ செய்வார்

2. முல்லைப்பூ கொண்டு வந்தே எங்கள்
மோகனாங்கியை பூஜை செய்தால்
இல்லை என்றும் சொல்லாமலே எங்கள்
அள்ள அள்ள அளித்திடுவாள்

3. மருக்கொழுந்து கொண்டு வந்தே எங்கள்
மனோன்மணியை பூஜை செய்தால்
திருக்கோலம் கொண்டு அங்கே
அவள் தினந்தோறும் வந்திடுவாள்

4. ஜாதிப்பூ கொண்டு வந்தே எங்கள்
ஜோதி அவளை பூஜை செய்தால்
ஓதி உணரா வித்தையெல்லாம் தந்து
மேதை என்று ஆக்கிவிடுவாள்

5. தாழம்பூ கொண்டு வந்தே எங்கள்
தாட்சாயணியை பூஜை செய்தால்
வாழாப் பெண்ணை நாதனுடன் அவள்
சேர்ந்து வாழவைத்திடுவாள்

6. மகிழம்பூ கொண்டு வந்தே எங்கள்
மாதங்கியை பூசைசெய்தால்
மணமாகாத கன்னிமார்கு திருமணம்
அவள் நடத்தி வைப்பாள்

7. பத்ரம் பல கொண்டு வந்தே எங்கள்
பகவதியை பூஜை செய்தால்
அத்தரைமேல் உள்வாக்கு அவள்
புத்திர பாக்யம் அருளிடுவாள்

8. தாமரைப்பூ கொண்டு வந்தே எங்கள்
இயாமரியை பூஜை செய்தால்
தாமதம் செய்யாமலே அவள்
தாலிப்பிச்சை தந்திடுவாள்

9. மல்லிகைப்பூ கொண்டு வந்தே எங்கள்
மகோஸ்வரியை பூஜை செய்தால்
பில்லி சூனியம் பெண் எல்லாம் - அவள்
பின்னாலே ஓடச் செய்வாள்

10. செண்பகப்பூ கொண்டு வந்தே எங்கள்
அம்பிகையைப் பூஜை செய்தால்
ஜன்மாந்திர பாபம் எல்லாம் அவள்
தீர்த்து விலக்கி ஓட்டிடுவாள்

11. பாரிஜாதம் கொண்டு வந்தே எங்கள்
பார்வதியைப் பூஜை செய்தால்
பாரிரூபம் கொண்டுமே - அவள்
நம் பாவமெல்லாம் போக்கிடுவாள்

12. அரலிப்பூ கொண்டுவந்தே எங்கள்
அபிராமியை பூஜை செய்தால்
அளவில்லாத செல்வத்தை - அவள்
அகமகிழ அளித்திடுவாள்

13. செம்பரத்தை கொண்டுவந்தே எங்கள்
சண்டிகையை பூஜை செய்தால்
தந்திரமாய் நம் கனவில் வந்து- அவள்
அந்தரங்கம் சொல்லிடுவாள்

14. மாதுளம்பூ கொண்டு வந்தே எங்கள்
மாதாவை பூஜை செய்தால்
மங்கல வாழ்வு தந்து அவள்
மனமகிழ செய்திடுவாள்

15. மருதாணிப்பூ கொண்டு வந்தே- எங்கள்
மீனாட்சியை பூஜை செய்தால்
மாறாத மனத்துடனே நம்மை பக்தி
பாடல்கள் பாடச் செய்வாள்

## ராகு கால துர்க்கா அஷ்டகம்

1. **வாழ்வும் ஆனவள் துர்க்கா வாக்குமானவள்**
**வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்**
**தாழ்வு அற்றவள் துர்க்கா தாயுமானவள்**
**தாபம் நீக்கியே என்னை தாங்கும் துர்க்கையே**
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

2. உலகை ஈன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரை காப்பவள்
நிலவலி நின்றவள் துர்க்கா நித்யை ஆனவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

3. செம்மையானவள் துர்க்கா ஜெயமுமானவள்
அம்மையானவள் அன்பு தந்தையுமானவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

4. உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்புவள்
பண்பு பொங்கிட என்றும் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

5. துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்ப தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபயவீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

6. குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்பதீபமே
திருவுமானவள் துர்க்கா திரிசூலியானவள்
திருநிற்றில் என்றும் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

7. ராகு தேவனின்பெரும் பூஜை ஏற்றயவள்
ராகு நேரத்தில் என்னை தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னை காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

8. கன்னி துர்க்கையே இதயகமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரகனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

1. வெள்ளிகிழமையில் பூஜை செய்தபோது
வேண்டிய வரங்களை கொடுப்பவளாய்
புஷ்பத்தால் அர்ச்சனை செய்த பேர்க்கு அம்பாள்
போக பாக்கியங்களை தருபவளாம்
குங்கும அர்ச்சனை செய்தபேர்க்கு அம்மாள்

2. கோடி கோடி பொன்னை கொடுப்பவளாம்
எண்ணெய்யால் அமிஷேகம் செய்தபேர்க்கு அம்பாள்
எதிரே வந்து நிற்பவளாம்
மஞ்சளால் அபிஷேகம் செய்த பேர்க்கு அம்பாள்
மாங்கல்ய பிச்சை கொடுப்பவளாம்.

3. இளநீரால் அபிஷேகம் செய்தபேர்க்கு- அம்பாள்
ஏகாந்த சேவையை தருபவளாம்
கரும்பால் அபிஷேகம் செய்தபேர்க்கு - அம்பாள்
கனவில் தரிசனம் கொடுப்பாளம்
கனியால் அபிஷேகம் செய்தபேர்க்கு அம்பாள்

கண்முன்னே வந்து நிற்பவளாம்
பாலால் அபிஷேகம் செய்தபேர்க்கு அம்பாள்
பல ஜன்ம பாவத்தை போக்குபவளாம்
தேனால் அபிஷேகம் செய்தபேர்க்கு அம்பாள்
திவ்ய தரிசனம் தருபவளாம்.

சந்தன அபிஷேகம் செய்தபேர்க்கு அம்பாள்
சர்வ பீஷடங்களை கொடுப்பவளாம்
சந்தன அலங்காரம் செய்தபேர்க்கு அம்பாள்
சாயுஜ பதவியை தருபவளாம்
மும்முறை வலம் வந்து தொழுபவர்க்கு - அம்பாள்



அபிராமி துணை

# அபிராமி அந்தாதி

காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
ஊரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே

**நூல்**

**உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலக முணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.** 1

துணையும். தொழுந்தெய்வமும், பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச் சிலையும், மென்பாசாங் குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவ தறிந்தனமே 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின்னன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக் குறவாய மனிதரையே 3

மனிதரும் தேவரும், மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தி எந்நாளும் பொருந்துகவே 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே 5
சென்னியது உன்பொற் திருவடித் தாமரை சிந்தையுள்ளே

சென்னியது உன்பொற் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்தன் பரமாகம் பத்ததியே 6

ததியுறு மத்தில் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய் சிந்துர ஆனன சுந்தரியே 7

சுந்தரி எந்தை துணைவி என்பாசத் தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே 8

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத் தனபாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்து என்முன் நிற்கவே 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதா மறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே 10

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்தமான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே 11

கண்ணியது உன்புகழ் கற்பது உன்நாமம் கசிந்துபத்தி
பண்ணியது உன் இரு பாதாம்புயத்தில் பகல் இரவா(க)
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே 12

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவாமுகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே 13

சிந்திப்பவர் நற் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே 14

தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்மதி வானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கு இடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே 16

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தம் எல்லாம்
துதிசய ஆனண சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமானது அபசயமாக முன் பார்த்தவர்த
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே 17

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே 18

வெளிநின்ற நின்திருமேனியைப் பார்த்து என்விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே 19

உறைகின்ற நின் திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ கஞ்சமோ எந்தன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே 20

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண்கொடியே 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம்பே பழுத்த

படியே மறையின் பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்து இங்கு இனிப் பிறவாமல்வந்து ஆண்டுகொள்ளே 22

கொள்ளேன் மனத்தினில் நின்கோலம் அல்லாது அன்பர் கூட்டம் தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே. 23

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணி புனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே! 24

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல்மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே 25

ஏத்தும் அடியவர் ஈரேழு உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங்கே மணம்நாறும் நின் தாளிணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின் அருள் ஏதென்று சொல்லுவதே 27

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமுஞ் சித்திக்குமே 28

சித்தியும் சித்திதரும் தெய்வமாகித் திகழும் பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்து எழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை அன்றே 29
அன்றே தடுத்து என்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை

நன்றே உனக்கு இனி நான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரை ஏற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே அருவே என் உமையவளே 30

உமையும் உமை ஒருபாகரும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயுமில்லை
அமையும் அமையுறு தோழியர்மேல் வைத்த ஆசையுமே 31

ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற வந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை நின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே 33

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்
தந்தே பரிவோடு தான் போயிருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமுங் பாகமும் பொற்
செந்தேன் மலரும் அலர் கதிர் ஞாயிறும் திங்களுமே 34

திங்கட் பசுவின் மணம்நாறும் சீறடி சென்னி வைக்க
எங்கட்கு ஒரு தவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ தரங்கக் கடலுள்
வெங்கட் பணி அணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே 35

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேது மின்றி ஒளி வெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே 27

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொழுது துடிஇடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராபதி ஆளுகைக்கே 38

ஆளுகைக்கு உன்தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உந்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாழ்நுதலே 39

வான்நுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே 40

புண்ணியம் செய்தனமே மனமே புதுப் பூங்குவளைக்
கண்ணியம் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணி நம் சென்னியின் மேல் பத்ம பாதம் பதித்திடவே 41

இடம்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடம்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலம்கொண்ட நாயகிநல்லரவின்
படம்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே 42

பரிபுறச் சீரடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்
திரிபுரசுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறவைர் செம்பாகத்து இருந்தவளே 43

தவளே இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையுமாயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனி ஒரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே 44

தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கையன்றே 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்தபெண்ணே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே 46

வாழும்படி ஒன்று கண்டுகொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று விள்ளும்படி அன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைக் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும்தோயும் குரம்பையிலே 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே 49

நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகியாதி உடையாள் சரணம் அரண் நமக்கே 50

அரணம் பொருள் என்று அருள்ஒன்றில்லாத அசுரர் தங்கண்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே 51

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே 52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந் தனி இருப்பார்க்கு இதுபோலும் தவமில்லையே 53

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
சொல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே 54

மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள் அகம் மகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடு எங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாரது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயில்கின்ற பெம்மானும் என்ஐயனுமே 56

ஐயன் அளந்தபடி இருநாளிகொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உந்தன் மெய்யருளே 57

அருணாம் புயத்தும் என்சித்த அம்புயத்து அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசேர் நயனக்
கருணாம் புயமும் வதன அம்புயமும் கர அம்புயமும்
சரணாம் புயமும அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு இக்கு அலராக நின்றாய் அறியாரெனினும்
பஞ்சஞ்சு மெல்அடியார் அடியார் பெற்ற பாலரையே 59

பாலினும் சொல்இனியாய் பனிமாமலர்ப் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடை நாய்த் தலையே 60

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருத் தங்கைச்சியே 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரி உரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்டநாயகி கோகநதச்
செங்கைக் கரும்பு மலரும் எப்போதும் என் சிந்தையதே 62

தேறும்படி சில ஏதுவும் காட்டி முன்செல் கதிக்குக்
கூறும்பொருள் குன்றில் கொட்டும் தறி குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே 63

வீணே பலிகவர் தெய்வங்கள்பால் சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டுகொண்டேன் நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனிப் பிரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே 64

ககனமும் வானும் புவனமும் காண விற்காமன் அங்கத்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே 65

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நீன் மரலடிச் செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும்பொற் பொருட்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே 66

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போது மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடிகள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பார் எங்குமே 67

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர் விசும்பும்
ஊரும் முருகு சுவை ஒளிஊறு ஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாமசுந்தரி சீறடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனம்இல்லையே 68

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன வெல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே 69

கண் களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்ப அடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண் களிக்கும் பச்சை வண்ணமுமாகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம் பெருமாட்டிதன் பேரழகே 70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே 71

என்குறைதீர நின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண் இரு நீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறைதீர எம்கோன் சடைமேல் வைத்த தாமரையே 72

தாமம் கடம்பு படை பஞ்சபாணம் தநுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடி இணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும் பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினில் தங்குவரே 74

தங்கு உவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்கு உவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே 75

குறித்தேன் மனத்தில் நின்கோலமெல்லாம் நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப் பிரான் ஒரு கூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே 76

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிர்அவி நான்மறைசேர் திருநாமங்கள் செப்புவரே 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்வி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என் துணைவிழிக்கே 78

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே 79

கூட்டியவா என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே 80

அணங்கே அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சிலி வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் எண்கண் நீவைத்த பேரளியே 81

அளிஆர் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்றஒளிர் திருமேனியை உள்ளும்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே 82

விரவும் புதுமலர்இட்டு நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே 83

உடையாளை ஓல்கு செம்பட்டு உடையாளை ஒளிமதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சு அடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மா னிடையாளை இங்கு என்னை இனிப்
படையாளை உங்களையும் படையர் வண்ணம் பாத்திருமே 84

பார்க்கும் திசைதோறும் பாசஅங்குசமும் பனிச் சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லல்லெல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க் குங்கும முலையும் முலைமேல் முத்துமாலையுமே 85

மால்அயன் தேட மறைதேட வானவர்தேட நின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும்படி ஒருபாகம் கொண்டு ஆளும் பராபரையே 87

பரமென்று உனை அடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத்தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கியபோதில் அயன்
சிரமொன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே 88

சிறக்கும் கமலத் திருவே நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின்துணைவரு நீயும் துரியமற்ற
உறக்கம் தர வந்து உடம்போடு உயிர்உறவற்று அறிவு
மறக்கும் பொழுது என் முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே 89

வருந்தா வகை என் மனத் தாமரையினில் வந்து புகுத்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே 90

மெல்லிய நுண்ணிடை மின் அனையாளை விரி சடையோன்
புல்லிய மென்முலைப் பொன் அனை யாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே 91

பதத்தே உருகி நின் பாதத்திலே மனம் பற்றி உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய் இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர்போனவழியும் செல்வேன்
முதற்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே 92

நகையே இஃது இத்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள் தன் தகைமையை நாடி விரும்புவதே 93

விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பில் கழித்து மொழி தடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும் பித்தராவர் என்றால் அபிராமி சமயம் நன்றே 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே 95

கோமளவல்லியை அல்லி அத்தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதுமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே 96

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தம் கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொரும்படைக் கந்தன் கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97


தைவந்து நின் அடித்தாமரை சூடிய சங்கரர்க்குக்
கைவந்த தீயும் தலைவந்தஆறும் கரந்தது எங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புக அறியா மடப் பூங்குயிலே 98

குயிலாய் இருக்கும் கடம்ப வடவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்து உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே 99

குழையைத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடும் தோளும் கருப்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரி அம்பாணமும் வெண்ணகையும்
உழையப் பொரு கண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றதே 100

**ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்**
**பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவி அடங்கக்**
**காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கருப்புவில்லும்**
**சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே** ன

# கந்தர் சஷ்டி கவசம்



## காப்பு

அமரரிடர் தீர அம ரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மையல் நடனஞ் செயும் மயில்வாகனனார்
கையில் வேலாலெனைக் காக்வென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற!
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!

நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகம் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன் மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்ப ட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இரு தொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலி முழங்க

செககண செககண செககண செககண
மொக மொக மொக மொக மொக மொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வா!
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடி புனை நெற்றியைப் புனித வேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம் பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுற செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணை வேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் காக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர் வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்

எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனைமயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்ச சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட்டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கை, கால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலைநோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைசல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகலொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்

கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி

உன் பதம் பெறவே உன் அருளாக
அன்புட னிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத் தாகவேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்றன் பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்ற டியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்

சிந்தை கலங்காது தியானிப்ப வர்கள்
ஒரு நாள் முப்பத் தாற உருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்ன ரெண்மரத் சேர்ந்தங்க ருளுவர்
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்

பொல்லா தவரை பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கர ரத்தடி
அறிந் தெனதுள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாக
சூரபத் மாவை துணிந்தகை யதனால்
இருபத் தேள்வர் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலாவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்திரு கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(கந்த சஷ்டி கவசம் முற்றிற்று)

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே
ஈதேஎந் தோழி பரி(சு) ஏலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக்(கு) என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போ(து) இப்போதார்அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்
சீசீ! இவையுஞ் சிலவோ? விளையாடி
ஏசும் இடமீதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்(கு) அன்பர்யாம் ஆர் ஏலோர் எம்பாவாய்!

முத்தென்ன வெண்ணகையாய்! முன்வந்(து) எதிர்எழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்(து) ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ? நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ? நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்(கு) ஏலோர் எம்பாவாய்!
ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?

எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்(கு) ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்(கு) இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயில், ஏலோர் எம்பாவாய்!

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்!
ஞாலமே விண்ணே பிறவே அறமிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே! சிவனே! என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரி(சு) ஏலோர் எம்பாவாய்!

மானே நீ நென்னலை நாளைவந்(து) உங்களை
நானே எழும்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந்(து) எம்மைத் தலையளித்(து) ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்!
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பா(டு) ஏலோர் எம்பாவாய்!

அன்னே! இவையும் சிலவோ? பலஅமரர்
உன்னற்(கு) அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் திசேர்மெழுகொப்பாய்
என்னாணை என்னரையன் இன்னமு(து) என்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந்துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்

என்னே துயிலின் பரி(சு) ஏலோர் எம்பாவாய்!
கோழி சிலம்பச் சிலம்புங் குரு(கு) எங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?
வாழியீ தென்ன உறக்கமோ? வாய்திறவாய்:
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பா(டு) ஏலோர் எம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்டு முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்(கு) அவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப்பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்(கு) எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்!

பாதாளம் எழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே!
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்(து) அரன்தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்!
ஏ(து) அவன்ஊர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏ(து) அவனைப் பாடும் பரி(சு) ஏலோர் எம்பாவாய்

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழிஅடியோம் வாழ்ந்தோம்காண்! ஆரழல்போற்
செய்யா! வெண் ணீறாடி! செல்வா! சிறுமருங்குல்

மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய்! எமைஏலோர் எம்பாவாய்!

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆ(டு) ஏலோர் எம்பாவாய்!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தா(டு) ஏலோர் எம்பாவாய்!

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடிச்
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆ(டு) ஏலோர் எம்பாவாய்!

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற்(கு) இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்

ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்(து) ஆ(டு) ஏலோர் எம்பாவாய்!

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்(து) உடையாள்
என்னத் திகழ்ந்(து) எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்(து) எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித்திருப்புருவம்
என்னச் சிலைக்குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற்பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை, ஏலோர் எம்பாவாய்!

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாய்க்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கன் அரசை அடியோங்கட்(கு) ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆ(டு) ஏலோர் எம்பாவாய்!

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித் தொகைவீ(று) அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்(து) ஆடுஏலோர் எம்பாவாய்!

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான்! உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா(து) எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க

இங்கிப் பரிசே எமக்(கு) எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென ஞாயி(று) எமக்(கு)? ஏலோர் எம்பாவாய்!

போற்றி! அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி! அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி! எல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி! எல் லாவுயிர்க்கும் போகாமாம் பூங்கழல்கள்
போற்றி! எல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி! மால் நான்முகனும் காணாதபுண்டரிகம்
போற்றி! யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி! யாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

## வராகி புகழ் மாலை

உலகெலாம் படைத்து காத்து உவந்து வரமணிக்கும்
உத்தமியே போற்றி
கருணை உள்ளம் கொண்வளே காரணியா - போற்றி
துன்பம் துடைத்திடும் தூமணியே துவாரகி போற்றி
வல்வினை நீக்கி வாழவைக்கும் வல்லவளே போற்றி
அன்பை அகற்றி அரவணைக்கும் அபிராமியே போற்றி
வராகமுகம் படைத்த வராகியோ போற்றி

# ஸ்ரீ வாராஹி சரணம்
# எட்டுத்திக்கு தேவாரம்

## கொடியேற்றத் திருவிழா, கொடியிறக்கத் திருவிழா ஆகியவற்றில் வெளிவீதியுலாவில் பாடப்படும் எட்டுத்திக்கு தேவாரம்

## பிரம்ம சந்தி கோபுரவாசல்

பண் - மேகராகம் குறிஞ்சி
இராகம் - மத்தியமாவதி

நீறு சேர்வதோர் மேணியர் நேரிழை
கூறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே

## இந்திர சந்தி

**பண் - காந்தாரம்**
**இராகம் - வேளாவல்லி**
**தாளம் - ரூபகம்**

கரவாடும் வன்நெஞ்சர்க்(கு) அரியானை கரவார்பால்
விரயாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அறவாடச் சடைதாழ அங்கையனில் அனலேந்த
இரவாகும் பெருமானை எம்மனத்தே வைத்தேனே

கைப்போது மலர்தூவி காதலித்து வானோர்கள்
முப்போதும் டிசாய்த்துத்தொழ நின்ற முதல்வன்
அப்போது மலர்தூவி ஜம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே

## அக்கினி சந்தி – தென்கிழக்கு

**தாளம் ஆதி**

சலம்பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோ டிசைப்பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டுழல்லவாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே

வன்னியும் மத்தமும் மதிபொதி நடையினன்
பொன்னியல் திருவடி புதுமலரவை கொடு
மன்னிய மறையவர் வழுபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத் தொருவனே

## இயம சந்தி – தெற்கு

**பண் - கௌசிகம்**
**இராகம் - குறிஞ்சி**

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தம நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே

நல்வினைப் பயன் நான்மறையின் பொருள்
கல்வி யாய சுருத்னத்ன உருத்திரன்
செல்வன் மேல திருமளயாளயைப்
புங்கி யேந்தும் அது புகழாகுமே

## நிருதிசந்தி தென்மேற்கு

பண்:- நட்டபாடை இராகம் :- பைரவி

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய வார்புனற் செல்வ மல்கு
சீர் கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கொரீ யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

ஈறாய் முதலொன்றாயிரு பென்னான் குண மூன்றாய்
யாருமறை நான்காய்வரு பூதமலை வந்தாய்
ஆறார் சுவை ஏழோசையோ டெட்டுத்திசைதானாய்
வேறாய் உடன் ஆனான் இடம்விழிம்மிழவையே

## வருணசந்தி – மேற்கு

**பண்"- சீகாமரம் ஈராகம் :- தேசிகம்**

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுளயெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளார்நத சம்பாதி நடாமென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையளிடம் புரிளிருக்கு வோதுரே

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாருல் சாய்க் காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசாமப் 'புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாயே நல்வினையே

## வாயுசந்தி — வடமேற்கு

பண்:- தக்கேசி இராகம்:- மகுடராமகிரி

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை என் பிழையைப் பொறுப்பானை
பிழை எலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறிஒண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத்து அணி
ஆரூரானை மறக்கலும் ஆமே

## குபேர சந்தி - வடக்கு

**பண் - தக்க ராகம்**
**இராகம் - காம்போதி**

பொடியுடை மாரிபினர் போர்விடை யேறிப்
பூத கணம்புடை சூழ
கொடியுடை யூந்திரிந்து ஐயம்
கொண்டு பலபல கூறி
வடிவுஜட வளர்நெடுங் கண்உமை பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம்

நீரும் புலற் கங்கையுந் தங்க முளமேல்
கூடும்மலை யானொரு பாகம் அமர்ந்தார்
மாமும்முழ வாமதி ராயட யாதர்
ஆடும்பதி அன்பிலாவந்துறையோ

## ஈசான சந்தி – வடகிழக்கு

பண் :- சாளபாணி / சாதாரி

தலையே நீ வணங்காய் தலை மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேறும் தலைவனைத் தலையே
நீவணங்காய்

எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டெமையாளும்
சம்பநத்ன காழியர் கோன் தன்னையுமாட் கொண்டனார்
அல்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்யென் செய் அயிலந்தே சேர்ந்திருக்கை யாயீந்தே

